நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி - 2
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2047

திங்கள் இதழ்
விலை ரூ. 10
பிப்ரவரி - 2017

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி
கல்லூரிக்குழு

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு)	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	*இதழ் மணம்*	4
2.	தனக்குவமை இல்லாத் தனிபபெரு நூல-(8) முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	6
3.	புறநானூறு : மூலத்தொகுபபின் சிறபபு பேராசிரியர். ப.மருதநாயகம் (செனற இதழின தொடாச்சி)	9
4.	பழந்தமிழாய்வு பேராசிரியர். கு.வெ.பாலசுப்பிரமணியன்	16
5.	கனியிருபபக் காய கவர்ந்தற்று முனைவர். ச.ஸ்ரீமதி	24
6.	கம்பனில போர் முனைவர். உ.கருப்பத்தேவன் (செனற இதழின தொடர்ச்சி)	27
7.	கம்பரில் உவமை வளம் பேரறிஞா. ம.ரா.போ.குருசாமி	34
8.	சஙகச் செய்திகள்	39

வலைதளம் : www.maduraitamılsangam.com

: www.senthamilcollege

மின்னஞ்சல் : maduraitamılsangam@yahoo.co ın

: principalsenthamılcollege@yahoo co ın

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ 1,000
ஆயுள் கட்டணம்	ரூ. 2,000	ரூ. 10,000
புரவலா கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம	ரூ. 10	

இதழ் மணம்

தொல்காப்பியம் *"மரபியல்"* குறித்த சிந்தனை இவ்விதழில் இடம் பெறுகிறது. முதுமுனைவர் இளங்குமரனார் மரபியலில் இடைச்செருகல் இடம் பெற்றிருப்பதைத் தெளிவுறுத்துகின்றார். தொல்காப்பியர் என்றும் ஒரு *தன்மைத்தாகி மாறா இயல்புடைய இயற்கை உண்மைகளையும் வாழ்வியல்* கூறுகளையும் தம் நூலில் எடுத்துரைப்பதால் தொல்காப்பியம் அறிஞர் உலகம் விரும்பும் அறிவியல் நெறி பேணும் நூலாக இன்றும் போற்றப்படுகிறது.

> ***"இறுதியாக அமைந்துள்ள மரபியலில் நூலே கரம் முதல்*** (71)
> ***அன்னர் ஆயினும் இழிந்தோர்க்கில்லை"*** (85)

வரையுள்ள நூற்பாக்கள் இடைச்செருகல் என்பதை நுண்ணிதின் உணர்ந்து மனத்தின் எண்ணி மாசு அறத் தெரிந்து கட்டுரை விளக்குகின்றது அதனை அறிஞர் உலகம் மறுசிந்தனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். படி நிலை அமைப்பு முறை புரோகிதர் வழக்கு; அரசர், அந்தணர், வைசியர் என மக்களைப் பிரித்து ஏற்றத் தாழ்வைப் புகுத்திய அமைப்பு முறை; படி நிலையில் அந்தணர் அரசர் ஆகலாம் என்பதும் வைசியர் வணிகத்துக்குரியவர் என்னும் படிநிலை அமைப்பு இந்த நாட்டில் இனப்பிரிவினைக்கு அடிகோலியது. மனிதனை மனிதனாகப் பார்ப்பது நாகரிகம்; ஏற்றத்தாழ்வுடைய படிநிலை அமைப்புமுறை புரோகிதர் திணிப்பு. அது தொல்காப்பியர்க்குரியதன்று; அது திணிக்கப்பட்டுள்ள இடைச் செருகல் என்பது கட்டுரை வழி தெளிவாகின்றது. தொல்காப்பியர் மரபியலில் மரபு என்பது மாற்றரும் சிறப்புடையது என மரபுக்கு இலக்கணம் வகுக்கின்றார் இயற்கை ஒழுங்கு தம் இயல்பில் மாறாத் தன்மை உடையது என்பதை விளக்குகின்ற நூற்பாக்களுக்கு இடையில் அறிவுக்கு ஒவ்வாத இத்தகைய செய்திகள் நுழைக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியத்தில் முரண்பாடு என்பது இடைச்செருகலால் விளைந்த குற்றமாகும். அவற்றை அறிஞர் உலகம் சிந்திப்பதும் மாணவர்களுக்கு அறிவுறுத்துவதும் வேண்டற்பாலது.

"பழந்தமிழாய்வு" என்னும் தலைப்பில் பேராசிரியர் கு வெ பாலசுப்பிரமணியன் இவ்விதழில் கட்டுரை அளித்துள்ளார். இக்கட்டுரை கும்பகோணத்தில் உ.வே.சா.வும் நீதியரசர் சேலம் இராமசாமி முதலியாரும் தொடங்கிய இலக்கிய ஆராய்ச்சி தொடங்கி இன்று வரை

சங்க இலக்கியத்தில் நிகழ்ந்துள்ள ஆய்வு நெறியில் ஏற்பட்டுள்ள சிந்தனை வளர்ச்சி அதன் புங்களிப்பு குறித்து விரிவாக ஆய்வு செய்கிறது. இக்கட்டுரை ஒவ்வொரு தமிழ் மாணவன், ஆசிரியர் கையிலும் மனத்திலும் இருக்க வேண்டும். தமிழாராய்ச்சிக் கூடங்களில் இக்கட்டுரை விரிவாக விவாதிக்கப்பட வேண்டும். இக்கட்டுரையின் ஒவ்வொரு தொடரும் பொருள் பொதிந்த அத்தொடர்களுக்கிடையில் தமிழ் வரலாறு எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையை உள்வாங்கிக் கொள்வதற்குத் தமிழ் மாணவரும் ஆசிரியரும் கட்டுரையில் ஆசிரியர் குறிப்பிட்டு எழுதிய நூல்களைப் படித்துக் கலந்துரையாடலுக்குக் கல்விச் சாலைகளில் நேரம் ஒதுக்கிடுதல் நலம் பயக்கும். பெரும்பான்மையாகக் கல்லூரிகளில் ஆசிரியரும் மாணவர்களும் ஆராய்ச்சி மேற்கொள்கின்றனர். ஆராய்ச்சி பயனுடையதாக விளங்க இக்கட்டுரைச் செய்திகள் ஆசிரியர் மாணவர்களுக்குப் புரிதல் வேண்டும். கு.வெ.பாலசுப்பிரமணியனார் தமிழ் உலகம் நன்கறிந்த சான்றோர். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நூல்கள் பல எழுதியுள்ளார். அவர்கள் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் சங்க இலக்கிய இருக்கைப் பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார். அதன்பின் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திருக்குறள் துறை இருக்கைப் பேராசிரியராகப் பணியாற்றி வருவது மகிழ்ச்சி தருகிறது. இப்பெரியார் தமிழ் உலகம் பயன் பெற உடல் நலத்தோடு நூறாண்டு வாழ வேண்டும்.

எவற்றைப் பாடுபொருளாகக் கொள்ளக்கூடாது என்று இலக்கியம் ஒதுக்கியதோ அவற்றை இன்றைய வார இதழ்களும் தொலைக்காட்சித் தொடர்களும் பிற ஊடகங்களும் காட்சிப்படுத்துவது நாகரிகமற்ற செயல் என்பதை உணர்தல் வேண்டும். வாணிகம் மக்கள் உள்ளத்தைச் சிதைத்துப் பொருளீட்டுவதே குறிக்கோளாக இருக்கக் கூடாது. இவை சிதிலப்படுத்தும் பொருள் என இலக்கணம் உணர்ந்து ஒதுக்கியதையும் ஆசிரியர் நயம்பட எடுத்துரைக்கிறார்.

"கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்னும் முனைவர் ச.ஸ்ரீமதியின் கட்டுரை படித்து இன்புறத்தக்கது. சிறு சிறு சொற்றொடர்களில் நயம்பட எழுதும் கலை வல்லவர். இன்சொல்லின் இனிமையும் தீச்சொல் பயக்கும் கேட்டையும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

முனைவர் உ.கருப்பத்தேவன், *"கம்பனில் போர்"* குறித்த செய்திகளை நயம்படவும் திறம்படவும் எழுதியுள்ளார். போர் நிகழ்ச்சிகளை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் நாடகப்பாங்கில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். போர்ச் செய்திகளைத் தொகுத்து உரைக்கும் உத்தி பாராட்டுக்குரியது.

++++++

தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்

8 முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

தொல்காப்பியம் என்னும் பெயரீடே, அதன் பழமையான மரபு காக்கும் தகைமையை நன்கு வெளிப்படுத்தும்.

நூல் தொடக்க இயலே நூன்மரபு; அடுத்தே மொழிமரபு; மேலும் தொகை மரபு, விளிமரபு!

இத்தனையும் போதா என்று நிறைவில் *'மரபியல்'* என்னும் பெயரிலேயே உள்ள இயல்!

ஒரு மரத்தினைக் காண்கிறோம். நமக்கு எப்படி முந்தையராம் தந்தை தாயர் உண்டோ, அப்படி அம்மரத்திற்கும் முந்தை, முந்தைக்கு முந்தை என மரங்கள் இருந்திருக்க வேண்டும் அல்லவோ! அதுவே முந்தையது இல்லையே!

வாழை என்றால் அதற்கு முந்தை முந்தை வாழைகள் வழியே வழியாக வந்தமையால் தானே,

"வாழையடி வாழையென" வந்த என்னும் செய்யுள் வழக்கும், மக்கள் வழக்கும் உண்டாயின! மாங்காய் மரத்திலே தேங்காய் பறிக்க முடியும் என்று ஒருவர் சொன்னால் நம்புவோமா? சொல்பவரைப் பற்றி நாம் என்ன எண்ணுகிறோம்

தம் புலமையைக் காட்டுவதற்காக வேண்டுமானால், தேங்காய் இனிய காய் எனப் பொருள் கூறலாமே அல்லாமல், தெங்கு (தென்னை) தரும் மாங்காய் என்றால் சொல்பவர் மேல் ஐயமில்லாமல் போகாதே!

மரபியல் முதல் முச்சீர்களிலேயே,

"மாற்றருஞ் சிறப்பின் மரபு"

என்று அதன் இலக்கணத்தைப் பளிச்சிட்டு விளங்கச் செய்கிறாரே தொல்காப்பியர்

மரபின் சிறப்பு மாறவே மாறாதது; அதை மாற்றிக் கூறல் ஆகாது; கூறினால் அதன் சிறப்பு ஒழிந்துபோம் என்பதால் தானே,

"மரபு நிலை திரியின் பிறிதுபிறி தாகும்"

என மேல் விளக்கம் தந்தார்

அந்த மரபைக் காட்டும் வகையால் தானே, இளமைப் பெயர், ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர் என்பவற்றை வரிசைப்படக்கூறி, கூறியதை இறுதி முதலாகப் பெண்மையும், ஆண்மையும், இளமையும் என்பாராய்,

"பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே"

என்றார் (70)

எவ்வுயிரி எனினும் இளமை இயற்கை, ஆண்மை இயற்கை, பெண்மையும் இயற்கை, இவை பிறப்பொடு வந்தவை.

பூக்களில் ஆண்பூ, பெண்பூ உண்டு அதன் முதல் நிலையாம் அரும்பும் உண்டு. பிறக்கும் போதே ஆண் குழந்தை, பெண் குழந்தை என்பவை பிறப்படையாளத்தொடே பிறத்தலால் தான், எவரும் ஆண், பெண் எனக் கண்டு கொள்கின்றனர்!

நூல், கரகம், முக்கோல், மணை; என்பனவும்,

படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், முடி, செங்கோல் என்பனவும், வில்லும் வேலும் கழலும் கண்ணியும் தாரும் ஆரமும் வாளும் என்பனவும், பிறக்கும் போதே உடன்பிறந்தனவா? இவ்வளவும் எவர்க்கும் அங்காடிகளிலும், சந்தைகளிலும், உலைக் களங்களிலும் கிடைப்பனதாமே!

நூல் நூற்பார், கலம் வனைவார், கொல்லுத் தொழில், தச்சுத் தொழில் செய்வார், வாணிகம் செய்வார் என்பார்க்கு இல்லாதவையா இவை!

இம்மரபல்லாத மரபென்று இட்டுக்கட்டவை, மூளைக்கோளாறு இருப்பவனும் ஒப்பமாட்டானே!

பொய்யைத் தொடர்ந்து சொன்னால், புனைந்து புனைந்து சொன்னால் அப்புனைவு எவ்வளவு காலம் ஆனாலும் மறைக்க முடியாதே!

"எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேல் மிதக்கும்" அல்லவோ!

சங்கத் தொகையிலேயோ, அதனை அடுத்து வந்த காலத்திலேயோ வழக்கில் இல்லாத *'வைசியன்'* என்னும் சொல் முன்னர்த் தோன்றிப் பல்லைக் காட்டுகிறதே! தான் ஊடு திணிக்கப்பட்ட சொல் என்று!

> ***"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி,***
> ***பிறவும் தமபோல் செயின்"***

என்னும் மாமணிக்குறள் நினைவில் தோன்றவில்லையா?

> ***"நூலே கரகம் முதல்"*** (71)
> ***அன்னர் ஆயினும் இழிந்தோர்க்கு இல்லை*** வரை (85)

செருகல் வேலை செய்து, அச் செருகல் குப்பையை மறைக்க,

> ***"புறக்கா ழனவே புல்லென மொழிப***
> ***அகக்கா ழனவே மரமென மொழிப"*** என,

மீளவும் *"மாற்றரும் சிறப்பின் மரபு"* கூறி, முடிபாக,

> ***"நிலந் தீ நீர்வளி விசும்பொ டைந்தும்***
> ***கலந்த மயக்கம் உலகம் ஆகலின்***
> ***இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்***
> ***திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"***

என்று கூறி அமையாமல்,

செய்யுளியலில் கூறிய நூல் (1422) நூல்வகை, சூத்திரம் என்பன மீளக் கூறல் தொல்காப்பியர்க்கு இயன்முறைப்பட்டதா?

நன்னூலார் பொதுப் பாயிரம் என்றவை அல்லவோ அவை.

"அவற்றுள்,
சூத்திரந் தானே,
ஆடி நிழலில் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே"

எனச் *செய்யுளியலில்* இடம் பெற்ற சூத்திரத் திலக்கணம் (167)

மேற்கிளந் தெடுத்த யாப்பின்உட் பொருளொடு
சில்வகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை எய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன் தெரி வுடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்"

இது, மரபியலில் இடம் பெற்ற சூத்திரத்திலக்கணம்(101) இரண்டும் ஒப்பவையா? ஒருவர் கூறியவையா? தொல்காப்பியர் காலத்தில் *காண்டிகையுரை* என்று ஒன்றை உரைக்க வகையுண்டா?

இவையன்றி முன்னேட்டைப் பின்னேடாகவும்; பின்னேட்டை முன்னேடாகவும் மாற்றிப் படி எடுத்தமையால்,

"இலக்கணம் உள்ளதற்கு எடுத்துக்காட்டு இல்லை" எனவும்,
எடுத்துக்காட்டு உள்ளதற்கு இலக்கணம் இல்லை" எனவும்,

உரையாளர்கள் எழுதினர்! ஏன்?

வெள்ளி பாடலும் கந்தி பாடலும் துள்ளிவந்த மண் இது! இத் திரிப்பு, திணிப்பு மாற்றருஞ்சிறப்பின் மரபில் புகுந்து விளையாடியதைக் கட்டுரை அளவால் எழுத முடியாமையால் 14 ஆண்டுகளின் முன்னரே *"தொல்காப்பிய மரபியல் ஆராய்ச்சி"* என 140 பக்க அளவில் நூலாக எழுதி அமிழ்தம் பதிப்பகம் வழியாக வெளியிடப்பட்டது.

-தொடர்வோம்

புறநானூறு : மூலத்தொகுப்பின் சிறப்பு

பேராசிரியர். **ப.மருதநாயகம்,** டி.லிட்.,
செம்மொழி ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு நிறுவனம், தரமணி,
சென்னை–600 113
அலைபேசி : 91944 2787727

சென்ற இதழின் தொடர்ச்சி : VI

குமணன் எனும் வள்ளலைப் பற்றிய எட்டுப் பாடல்கள் திணை, துறை வாரியாக வைக்கப்படுமானால் **297, 279, 280, 183, 247, 184, 281, 248** என்ற எண்களில் பிரிக்கப்பட்டுவிடும். ஆனால் மூலப்பதிப்பில் அவை **158, 159, 160, 161, 162, 163, 164, 165** என்ற வரிசையில் கோர்க்கப்பட்டு அவனது பெருமையையும், அவனைப் பாடிய புலவர்களின் அருமையையும் புலப்படுத்தக் காணலாம்.

முதல் பாடலில் பெருஞ்சித்திரனார் குமணனைக் கடையேழு வள்ளல்களோடு ஒப்பிட்டுப் பாராட்டுகின்றார்

பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி ஆகிய எழுவரும் இறந்த பின் 'இரப்பவரது துன்பத்தைத் தீர்க்கும் கடப்பாடு உடையேன் யான்' என்று நீ இருத்தலால், உன்னிடம் பரிசில் பெற வந்துள்ளேன். முதிர்ந்த பலாப்பழத்தைப் பெற்ற கடுவன் கையால் குறிசெய்து மந்தியை அழைக்கும் முதிரமலைத் தலைவனே! நீ எடுத்தவேல் பகைவரிடத்து உயர்வதாக! **(158)**

அடுத்த பாடலில் பெருஞ்சித்திரனார் தமது வறுமையின் கொடுமையைச் சொல்லிக் குமணனிடம் பரிசில் வேண்டுகிறார்.

எனது தாயும், மனைவியும், குழந்தையும், சுற்றமும் பசியால் வாடுகின்றனர். ஆயினும் முகம் திரிந்து தரும் பரிசில் யானையாயினும் அதனை ஏற்கமாட்டேன். நீ மகிழ்ச்சியோடு நான் இன்புறுமாறு, குன்றியென்னும் அளவையுடைய சிறிய பொருளாயினும் அதனை ஏற்றுக் கொள்வேன். எனவே அம்முறையில் அருள் செய்வாயாக! **(159)**

பெருஞ்சித்திரனாரே அடுத்த பாடலில் குமணனின் வண்மையையும் தமது குடும்பத்தின் வறுமையையும் சொல்லிப் பரிசில் வேண்டுகிறார்.

முதிர மலைத்தலைவனாகிய குமணனிடம் சென்றால் உனக்கும் உன் சுற்றத்தார்கக்கும் நல்லுணவும் அணிகலன்களும் தருவான் என்று உனது புகழைப் பலர் பேசியதால் உன்னை வந்தடைந்தேன். பசியால் வாடிய எனது புதல்வன் துயரை அவனது தாயால் எதைச் செய்தும் தீர்க்க இயலவில்லை. எனவே பெருஞ்செல்வத்தைப்பெற்ற நீ பரிசிலை விரைவில் தந்து விடை கொடுப்பாயாக! உன்னை நாங்கள் பலவாறு வாழ்த்துவோம். (160)

அடுத்த பாடலில் தனது வறுமையை மீண்டும் பலபட எடுத்துச் சொல்லும் பெருஞ்சித்திரனார் குமணனிடம் பெருஞ்செல்வம் நல்குமாறு வேண்டுகோள் விடுக்கிறார்.

என் மனையாள் வியக்குமாறு அரிய பரிசில்களுடன் செல்ல விரும்புகிறேன். என் வறுமை என்னைத் துரத்த உனபுகழ் என்னை இங்குக் கொண்டு வந்துள்ளது. எனது அறிவை அளந்தறிய முனையாது, உனது தகுதியின் அளவிற்கேற்ப எனக்குப் பரிசில் தருவாயாக அதைக கண்டு வேந்தர்களும் நாண வேண்டும். உன்னையும், உனது படையையும், செல்வத்தையும் பலவாறு புகழ்வோம். (161)

வெளிமான் என்பானிடம் பரிசில் பெற விரும்பிச் சென்ற பெருஞ்சித்திரனார் அவன் தம்பியாகிய இளவெளிமானைக் கண்டு அவனிடம் பரிசில் கேட்க, அவன் சிறிதே தர அதை ஏற்காது குமணனைப் பாடிக் குமணன் கொடுத்த யானையை வெளிமான் ஊர்க் காவல் மரத்தில் கட்டி, அவனுக்கு அறிவுரை கூறுவதாய் அமைந்துள்ளது அடுத்த பாடல்.

நீ இரவலரைப் பாதுகாக்கக் கூடியவன் அல்லன்; இரவலரைக் காக்கும் புரவலர்கள் இல்லாமல் போகவில்லை; இரப்போரும் இரப்போர்க்கு இடுவோரும் உள்ளார்கள் என்பதை அறிவாயாக! உனது காவல் மரத்தில் கட்டி வைத்துள்ள யானை உனக்கு எமது பரிசில், நான் செல்லுகிறேன். (162)

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பரிசில் பெற்று வந்து அவரது மனைவிக்குச் சொல்லும் அறிவுரை அடுத்தபாடல்.

பழங்கள் காய்த்துத் தொங்கும் முதிரமலைத் தலைவனாகிய குமணன் நமக்கு அளித்த செல்வம் இது. உன்னை விரும்புவோர்க்கும், உனது சுற்றத்தினர்க்கும் நமது சுற்றத்தாரது பசி

நீங்க நெடு நாட்படக் குறியெதிர்ப்பைத் தந்தோர்க்கும் இவர் இன்ன தன்மையர் என்று எண்ணிப் பாராமல் என்னிடம் அனுமதி கேளாது, எதிர்காலத்திற்குத் தேவையென்று சேமித்து வைத்துக் கொள்ளக் கருதாது, எனது மனைக்கு உரியவளே, யாவர்க்கும் வழங்குவாயாக. (163)

தமது வறுமையின் கடுமையைப் பாடிய பெருஞ்சித்திரனார் செல்வத்தின் பயனை இவ்வாறு எடுத்துரைப்பது வியந்து வியந்து பாராட்டுதற்குரியது அடுத்துவரும் பாடல் பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் குமணனிடம் தமது வறுமையைச் சொல்லிப் பரிசில் இரப்பதாக அமைந்துள்ளது.

தனது குழந்தையின் பசியைத் தீர்க்க இயலாத என் மனைவியின் துயரத்தைக் கண்டு வேதனையுடன் உன்பால் வந்தேன். போரில் வல்ல குமணனே, எனது வறுமையை நீ அறியச் சொல்லிப் பரிசில் பெறாது விடேன். கூத்தரது வறுமையைக் கெடுக்கும் குடியில் பிறந்தவன் நீ என்பதால் உன்னை அடைந்தேன். (164)

அடுத்த பாடல் பெருந்தலைச்சாத்தனாரே குமணனின் இளவலாகிய இளங்குமணனைக் கண்டு, அவனது தமையனின் வள்ளண்மையின் சிறப்பை அவன் உள்ளத்தில் தைக்குமாறு கூறுவதாக அமைகிறது.

நிலையற்ற உலகில் நிலைபெற்ற வாழ்வை விரும்புவோர் தம் புகழை நிலை நாட்டிவிட்டு இறத்தல் வேண்டும். வறுமையில் வாடுவோர்க்கு ஈயாத செல்வர்கள் இத்தகைய நிலையைப் பெறமாட்டார். யானையைப் புலவர்க்கு அளிக்கும் குமணனைப் பாடி நின்றேன். பரிசில் பெறவந்தோன் வறிதே செல்லுதல் எனது நாட்டினை இழத்தலைவிடக் கொடியது என்று எண்ணித் தனது தலையைக் கொடுப்பதற்காக வாளைத் தந்தான் அவன். (165)

இப்பாடல்களைத் துறையடிப்படையில் வரிசைப்படுத்தினால் முதல் பாடலை வாழ்த்தியல் என்றும், இரண்டாம் பாடலைப் பரிசில் கடாநிலை என்றும், மூன்றாம் பாடலைப் பரிசில் கடாநிலை என்றும், நான்காம் பாடலைப் பரிசில் என்றும், ஐந்தாம் பாடலைப் பரிசில் விடை என்றும், ஆறாம்பாடலைப் பரிசில் என்றும், ஏழாம் பாடலைப் பரிசில் கடாநிலை என்றும், எட்டாம் பாடலைப் பரிசில் விடை என்றும் வெவ்வேறு இடங்களில்

வைக்க நேரிடும். அவற்றின் ஒன்றுபட்ட தாக்கம் வலுவிழந்துபோகும். மேலும் பரிசில், பரிசில் விடை, பரிசில் கடாநிலை ஆகிய துறைகள் ஒன்றுக்கொன்று பெருத்த வேறுபாடற்றவை என்பது நோக்கற்பாலது.

VII

வையாவிக் கோப்பெரும் பேகன் என்னும் குறுநில மன்னன் பற்றிப் பரணர் பாடிய நான்கு பாடல்கள், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய மூவர் பாடிய மூன்று பாடல்கள் புறநானூற்றின் மூல ஏடுகளில் **141–147** என்ற வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. அவனது வண்மையைப் புகழ்வதோடு அவன் வாழ்வில் நிகழ்ந்த இரங்கத்தக்க நிகழ்ச்சியையும் இப்பாடல்கள் உள்ளத்தை உருக்கும் வகையில் எடுத்தியம்புகின்றன இவன் ஒரு வரலாற்றுப் பாத்திரம் என்பதிலும் இது வரலாற்று நிகழ்ச்சி என்பதிலும் ஐயமிருக்க வழியில்லை. பாடிய புலவர் அடிப்படையில் இடம் பெற்றிருக்குமானாலும் வையாவிக்கோப்பெரும் பேகனின் ஆளுமை நம்மில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தல் அரிதாகியிருக்கும்.

பரணரின் முதற்பாடல் பேகனின் கொடை மடம் பற்றிப் பேசுகிறது.

"பாணர் சூடிய பொன்னாலான தாமரைப்பூ, விறலி அணிந்த பொன்னரி மாலை, விரைந்து செல்லும் குதிரை பூட்டிய நெடியதேர் ஆகியவற்றோடு விளங்கும் நீங்கள் பாணரோ?" என்று எம்மைக் கேட்கும் இரவலனே, எம் தலைவனைக் காண்பதற்கு முன் நாங்கள் உங்களைவிட வறியவர்களாய் இருந்தோம். இப்பொழுது இத்தகைய செல்வம் பெற்றுள்ளோம். அவன் மயிலுக்குப் போர்வை ஈத்தவன். பேகனின் ஈகை தனது மறுமை இன்பத்தைக் கருதியதன்று. பிறரது வறுமையைப் போக்குவதையே நோக்கமாகக் கொண்டது. **(141)**

பரணரின் இரண்டாம் பாடலும் அவனது கொடை மடத்தைக் கூறுகிறது. வற்றிய குளத்தில் பெய்தும், வயலில் பொழிந்தும், உவர் நிலத்தை நிறைத்தும், இவ்வாறு எவ்விடத்தும் பெய்யும் மழையைப் போன்று பேகன் கொடையைப் பொறுத்தமட்டில் அறியாமை உடையவன்; ஆனால் பகைவரது படையைக் கண்டவிடத்து அறியாமை உடையவன் அல்லன். **(142)**

அடுத்துவரும் கபிலர் பாடல் பேகனால் துறக்கப்பட்ட அவனது மனைவி கண்ணகியின் துயரை அவனுக்கு எடுத்துச் சொல்வது.

கைவண்மையால் கொடுக்கும் ஈகைக் குணம் கொண்ட பேகனே, நேற்று எனது சுற்றத்துடன் உனது இல்லத்தின் வாயிலில் நின்று உன்னையும், உன் மலையினையும் பாடியபோது, உனது மனைவி துன்பத்தால் பெருகும் கண்ணீரை நிறுத்த மாட்டாதவளாய், குழல் இரங்கி ஒலிப்பதுபோல் அழுது கொண்டிருந்தாள். (143)

இப்பாடல் செய்தியைத் தொடர்வது போல் அமைவது அடுத்துவரும் பரணரின் பாடல்.

நாங்கள் செவ்வழிப் பண்ணை இசைத்துக் கானலைப் பாடினோம். கண்ணீர் மார்பகத்தை நனைக்க வருந்தியவளிடம், "இளமையானவளே, எம்மிடம் அன்பையுடையவன் எங்கே?" என்று நாங்கள் கேட்க, அவள் "யாம் அவனுடைய உறவினர் அல்லேம்; இப்பொழுது எம்மையொத்த ஒருத்தியை விரும்பி, முல்லைக்கொடியை வேலியாகக் கொண்ட நல்லூர்க்கு நாளும் வருகின்றாரென்று பலரும் சொல்லுவர்" என்று கூறினாள். அவளுக்கு நீ அருள் செய்யாமல் இருப்பது கொடிது. (144)

பரணரின் வேண்டுகோள் சற்றுக் கடுமையாவதை அடுத்த பாடலில் காணலாம்.

குளிரால் நடுங்கும் என்று வருந்தி மயிலுக்குப் போர்வை அளித்தவனே, நாங்கள் பசித்து வரவில்லை; உன்னிடம் பரிசிலை விரும்பி வரவில்லை; எங்களுடைய சுற்றத்தார் யாரும் இல்லை. உன்னிடம் நாங்கள் கேட்கும் பரிசு இஃதே: "அறத்தைச் செய்வாயாக! இன்று இரவே தேரில் ஏறிச் சென்று பிரிவால் வாடும் அவளது நோயைத் தீர்ப்பாயாக!" (145)

அடுத்து வரும் அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய இருவருடைய பாடல்களும் இதே கருத்தை வலியுறுத்தும். பேகனே, அரிய அணிகலன்களையும் செல்வத்தையும் உன்னிடமிருந்து பெறுதலை நாங்கள் விரும்பமாட்டோம். சிறிய யாழைச் செவ்வழிப் பண்ணில் இசைத்து உனது நாட்டினைப் பாடுதற்குப் பரிசில் தருவாயானால், யாம் உன்னிடம் கேட்பது இதுவே; பொறுக்க முடியாத துன்பத்தால் வருந்தும் உன் மனைவி கூந்தலில் புகையை மூட்டி, மணம் கமழும் மாலையைச் சூடுமாறு, உன் தேரைக் குதிரைகள் பூணுதல் வேண்டும். (146)

என்பது அரிசில்கிழார் பாடல்.

பல மலைகளைக் கடந்து சிறிய யாழில் செவ்வழிப் பண்ணை இசைத்து வந்துள்ளோம். கார்காலத்து மழையின் இனிய துளிவிழுகின்ற ஓசையைத் தனித்திருந்து கேட்டு வருந்தும் உன் மனைவி தனது கூந்தலை மாசறக் கழுவிப் புதியமலர் சூடுமாறு இன்று நீ வருவாயாயின் அதுவே நீ எங்களுக்குத் தரும் பரிசிலாகும். (147)

என்பது பெருங்குன்றூர் கிழார் பாடல்

இப்பாடல்கள் புலவர்களின் தன்னலமற்ற பண்பைப் புலப்படுத்தும். இவற்றை இவ்வரிசையில் அமைக்காது பாடிய புலவர்களின் அடிப்படையிலோ, திணை, துறை அடிப்படையிலோ வைத்தால் இவ்வரலாற்று நிகழ்ச்சியும் அது காட்டும் தமிழ்ப் பண்பாட்டுக் கூறும் தக்க அழுத்தம் பெறாமல் போய்விடும். துறை வாரியாக அவற்றைப் பிரித்தால், அவை 253, 230, 389, 390, 391, 392 என்ற எண்களைப் பெறும்.

பாடல்களின் வரிசையில் கலை நுட்பத்தைக் கையாளும் மூலத் தொகுப்பினைச் செய்தோர் துறைவாரிப் பகுப்பை முற்றும் புறக்கணித்தார்கள் என்று சொல்ல முடியாது. பாடப்பட்டோர் இல்லாத மகட்பாற் காஞ்சிப்பாடல்கள் திணை–துறைப்பதிப்பில் 41 முதல் 59 வரை இடம் பெறும். இவை மூலப்பதிப்பில் 336 முதல் 359 வரையிலான எண்ணுள்ள பாடல்களில் அடங்கும். இவற்றைப்பாடிய புலவர்கள் அடைநெடுங்கல்வியார்(2), அண்டர்மகன்குறுவழுதி(1), அரிசில்கிழார்(1), கபிலர்(2), காரிக்கண்ணனார்(1), குன்றூர் கிழார் மகனார் (1) பரணர்(6), மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார்(1) மதுரைப்பட மங்க மன்னியார்(1), மதுரை மருதனிளநாகனார்(1) என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்

எனவே புறநானூற்றுப் பதிப்பை மேற்கொள்வார் முடிந்த அளவு உ.வே.சா பின்பற்றியுள்ள மூலப்பதிப்பு வரிசையைக் கையாள்வது நன்று. அவ்வாறு செய்யும் போது மேலைப் பதிப்பாளர்கள் பின்பற்றும் முறையை மேற்கொள்ளலாம் பல திறனாய்வு அணுகுமுறைகளைக் கையாளும் பல கல்வியாளர்களின் கட்டுரைகளைத் தொகுத்துத்தரும்போது இரண்டு மூன்று பொருளடக்க வரிசைகளை அவர்கள் தருவது வழக்கம். கட்டுரை ஆசிரியர்களின் கால வரிசை, அணுகுமுறைகளின் வரிசை, கட்டுரை

ஆசிரியர் பெயர்களின் அகரவரிசை, கட்டுரைத் தலைப்புகளின் அகரவரிசை பாடல்களின் வரிசையில் கலைநுட்பத்தைக் கையாளும் மூலத்தொகுப்பினைச் செய்தோர் துறைவாரிப் பகுப்பை முற்றும் புறக்கணித்தார்கள் என்று சொல்ல முடியாது. பாடப்பட்டோர் இல்லாத மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் திணை–துறைப்பதிப்பில் 41 முதல் 59 வரை இடம் பெறும். இவை மூலப்பதிப்பில் 336 முதல் 359 வரையிலான எண்ணுள்ள பாடல்களில் அடங்கும் இவற்றைப் பாடிய புலவர்கள் அடைநெடுங்கல்வியார்(2), அண்டர்மகன் குறுவழுதி,(1), அரிசில்கிழார்(1), கபிலர் (2), காரிக்கண்ணனார்(1), குன்றூர்கிழார்மகனார்(1) பரணர்(6), மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார்(1) மதுரைப்பட மங்கமன்னியார்(1), மதுரை மருதனிளநாகனார்(1) என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எனவே புறநானூற்றுப் பதிப்பை மேற்கொள்வார் முடிந்த அளவு உ.வே.சா. பின்பற்றியுள்ள மூலப்பதிப்பு வரிசையைக் கையாள்வது நன்று. அவ்வாறு செய்யும் போது மேலைப் பதிப்பாளர்கள் பின்பற்றும் முறையை மேற்கொள்ளலாம். பல திறனாய்வு அணுகுமுறைகளைக் கையாளும் பல கல்வியாளர்களின் கட்டுரைகளைத் தொகுத்துத் தரும்போது இரண்டு மூன்று பொருளடக்க வரிசைகளை அவர்கள் தருவது வழக்கம். கட்டுரை ஆசிரியர்களின் காலவரிசை, அணுகுமுறைகளின் வரிசை, கட்டுரை ஆசிரியர் பெயர்களின் அகரவரிசை, கட்டுரைத் தலைப்புகளின் அகரவரிசை என்றெல்லாம் அன்னார் தருவது தொகுப்பிலுள்ள எக்கட்டுரையைத் தேடுவாரும் எளிதில் அதனைக் கண்டறிய உதவும். புறநானூற்றைப் பொறுத்தமட்டில் மூலத்தொகுப்பின் வரிசையில் பாடல்களைத் தருவோர் பாடியோர் வரிசை, பாடப்பட்டோர் வரிசை, திணை, துறைவரிசை ஆகியவற்றையும் பொருளடக்கமாகவோ, பின்னிணைப்பாகவோ கொடுத்துவிடுவது குறிப்பிட்ட பாடலைத் தேடுவார்க்குத் துணை செய்யும்.

துணை நூல் :

கி.இராசா, பதிப்பாசிரியர், புறநானூறு, துறைப்பதிப்பு, திருச்சி, பார்த்திபன் பதிப்பகம்.2007.

++++++

பழந்தமிழாய்வு

பேராசிரியர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்,**
எம.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி.,
திருக்குறள் இருக்கைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம்
அலைபேசி. 94427 14072

21.10.1880 என்ற வியாழக்கிழமை நாள் தமிழாராய்ச்சி வரலாற்றில் ஒரு பொன்னாள். அன்றுதான் உ.வே.சாமிநாதையரவர்கள் கும்பகோணம் வட்ட அறமன்ற நடுவர் சேலம் இராமசாமி முதலியாரைச் சந்தித்தார். நடுவரின் வினாவுக்கு விடையாகத் தாம் படித்த சிற்றிலக்கியங்கள், புராணங்கள், சைவ சித்தாந்த நூல்கள், இலக்கண நூல்கள், கம்ப இராமாயணம் ஆகியவற்றையெல்லாம் ஐயர் பட்டியலிட்டார். நடுவர் நிறைவடையாமல் 'சீவக சிந்தாமணி படித்திருக்கின்றீர்களா' என்று கேட்கிறார். பின்னர் சிந்தாமணிப் படியையும் அளிக்கின்றார் சிந்தாமணியில் நச்சினார்க்கினியர் உரை மேற்கோளாகக் காட்டியிருக்கும் சங்க நூல்களைப் பற்றிய அறிமுகம் ஐயருக்கு அப்போதே கிட்டியது. சிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் ஆகியவற்றைப் பதிப்பித்த பின் புறநானூற்றை ஐயர் பதிப்பித்தார்.

> *"1894 ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் புறநானூறு பதிப்பித்து நிறைவேறியது. நான் பதிப்பித்த எட்டுத்தொகை நூல்களுள் இதுவே முதலாவது. ஆதலால் முகவுரையில் எட்டுத்தொகைகளையும் பற்றிய வரலாற்றை எழுதினேன். அகம், புறம் என்ற இருவகைப் பொருளின் இயல்பையும் விளக்கினேன்."*[1]

என்று இப்பதிப்பைக் குறித்து ஐயர் கூறுகின்றார். இப்பதிப்பிற்கும், 12 8.1937இல் தாமே உரையெழுதிப் பதிப்பித்த குறுந்தொகைக்கும் இவற்றுக்கு முன்னர் வெளியிட்ட பத்துப்பாட்டிற்கும் ஐயர் எழுதிய ஆராய்ச்சி உரைகள், இப்பழந்தமிழ் இலக்கியங்கட்கு முதன் முதலில் எழுதப்பெற்ற தலைசிறந்த ஆராய்ச்சி உரைகளாகும். உரையாசிரியர்களின் உரைத்திறனாய்வுக்குப் பின்னர் இப்பதிப்புரைத் திறனாய்வுகள் சங்கச் செவ்விலக்கியங்களின் பல பரிமாணங்களையும் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஒரு பகுதி இங்குக் காட்டப் பெறுகின்றது. குறிஞ்சிப்பாட்டை இயற்றிய கபிலரைப் பற்றிக் கூறுகையில்,

> *"அன்னாய் வாழி வேண்டன்னை" என இப்பாட்டைத் தொடங்கியது போலவே, ஐங்குறுநூற்றில் அன்னாய் வாழிப் பத்து முழுவதும் இத்தொடர் மொழியே அமைக்கப்பட்டிருக்கின்றது. தலைவியினது நோயின் காரணத்தை அறிவதற்காகச் செவிலி கடவுளைப் பேணுதல் முதலியவற்றை இயற்றியதாக இதிற்கூறியதற்கேற்ப, "அன்னையும்*

பொருளுக்குத் தலமரும்" (அகநா 292) "கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி அறியா வேலன் வெறியெனக் கூறும், அதுமனங்கொள்குவை யனையிவள், புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே" (ஐங் 243) என்று பாடிய பகுதிகள் அறிதற் குரியன. இத்தகைய செய்திகளை விளங்க உணர்த்தி, ஐங்குறுநூற்றில் 'வெறிப்பத்து' என்னும் பத்துச் செய்யுட்களைத் தனியே பாடியுள்ளார். தலைவியின் நோய்க் காரணத்தை அறியாத செவிலி வருந்தும் முறை இங்கே கூறியவாறே, "அறியாமையின் வெறியென மயங்கி அன்னையும் அருந்துயருழந்தனள்"'(ஐங்242) என்று பிறிதோரிடத்தும் காணப்படுகின்றது..."[2]

இவ்வாறே கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களிலும் இதனோடியைந்த ஒப்புமைப் பகுதிகளைக் காட்டுகின்றார். காக்கைபாடினியார், நச்செள்ளையார், கயமனார், ஓரேருழவர், கள்ளிலாத்திரையனார் ஆகியோர் குறுந்தொகையில் அவர்கள் பாடிய பாடல்களிற் பயிலும் தொடர்களாற் பெயர் பெற்றவர்கள் என்பதைக் காட்டி,

"இவ்வாறு குறுந்தொகையில் உள்ள சொற்றொடர் காரணமாகப் பெயர் பெற்ற புலவர்கள் அப்பெயராலேயே பிற நூல்களில் வழங்கப் பெறுவது போல, அந்நூல்களில் உள்ள செய்யுட் பகுதி காரணமாகப் பெயர் பெற்றாரது பெயர் ஒன்றேனும் குறுந்தொகையில் வரவில்லை. இதனாலும் முதலில் குறுந்தொகை தொகுக்கப்பட்டது என்பது தெளிவாகும்."[3]

எனத் தெளிவுறக் கூறுவர். சங்க இலக்கியங்களின் ஆராய்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர் அவரே. ஐயர் புறநானூற்றை வெளியிட்ட பின், அந்நூலின் மூதின் முல்லைப் பாடல்களைக் குறித்து மு.இராகவய்யங்கார் செந்தமிழ் ஏட்டில், 'வீரத்தாய்மார்' என்ற கட்டுரையை எழுதினார். இக்கட்டுரை முழுமையும் பண்டைக்காலப் புறநானூற்றுப் போர் நிகழ்ச்சிகளைக் குறித்தது இந்தக் கட்டுரையைச் சுப்பிரமணிய பாரதியார் தம் 'இந்தியா' ஏட்டில் மீளவும் பகுதி பகுதியாக வெளியிட்டு நாட்டில் உரிமைக் கனலைத் தூண்டுதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தி யிருக்கிறார். இந்தக் கட்டுரையைப் படித்த பாரதியார், "தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'ஸ்வேதச பக்தி' என்ற புது நெருப்பிற்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்" என்று கடிதம் எழுதியிருக்கிறார். ஆகப் புறப்பாடல் ஆராய்ச்சி இந்திய விடுதலை உணர்வைத் தூண்டும் கருவியாகியிருக்கிறது.

சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்ற பின் ஆராய்ச்சியின் தேவை மிகுதியாயிற்று. எடுத்துக்காட்டாகப் புறநானூறு குறித்துப் பலப்பல ஐயங்கள் பயில்வாரிடைத் தோன்றின. அகநூல்களைக் குறித்தும் பல ஐயங்கள் எழுந்தன.

"ஐயரவர்கள் புறநானூற்றைப் பதிப்பித்தபின் அந்நூலிலுள்ள செய்திகள் குறித்துப் பலப்பல ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. அதற்கு முன் ஆராய்ச்சியேயின்றிக் குறிஞ்சிப்பாட்டுக் கபிலரையும் இன்னா நாற்பது கபிலரையும் ஒருவரென எண்ணும் போக்கு இருந்தது. சேரன் வஞ்சி எதுவென அறியப் பெறாமலிருந்தது. காஞ்சித்திணை போர்த்திணையா இழவுத் திணையா என்ற ஐயமிருந்தது. பாடாண் எட்டு எவை என்பதில் மயக்கமிருந்தது. கைக்கிளை பெருந்திணை அன்பில் திணைகளோ என்ற வினாவிருந்தது. நெய்தற்றிணைக்கும் பாலைத் திணைக்கும் வேறுபாடு உணரப்படாமலிருந்தது. உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் உரிய இலக்கணம் புரியாமல் இருந்தது. பேகனைக் கண்ணகி காரணமாகப் பாடியதைக் குறித்துத் தெளிவின்மை இருந்தது. கொடிநிலை, கந்தழி, வள்ளி என்பன எவற்றைச் சுட்டுவன என்பது புலனாகாமல் இருந்தது. கூற்றுக்கும் துறைக்கும் வேறுபாடு கருத்திற் பதியாமல் இருந்தது. நோன்காழ் எஃகத்தின் தலையில் வேம்பு யாத்தமைக்குக் காரணம் தோன்றாமலிருந்தது. இப்படிப் பலப்பல..."[4]

எனச் சுட்டுமாறு தோன்றிய பல ஐயந்திரிபுகட்கும் மயக்கங்கட்கும் சான்றோர் பலர் கட்டுரைகள் விடை தந்தன. சேரர் தாயமுறை குறித்துச் செந்தமிழ் ஏட்டில் வெளிவந்த கட்டுரைகள், சேரர் வஞ்சி குறித்து, உ.வே.சா கனகசபைப்பிள்ளை, இரா.இராகவையங்கார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை ஆகியோர் ஆராய்ந்து எழுதினர். சேரன் அளித்த பெருஞ்சோறு குறித்து மு.இராகவையங்கார், பி.டி.சீனிவாச ஐயங்கார், மயிலை சீனி.வேங்கடசாமி, தேவநேயப் பாவாணர், ப.அருணாசலம் ஆகியோருடைய கட்டுரைகள் செந்தமிழிலும், செந்தமிழ்ச் செல்வியிலும் வந்தன. செங்குட்டுவன் காலம், கரிகாலர் இருவரா மூவரா என்னும் ஆய்வுகள் அறிஞர்களால் தொடர்ந்து எழுதப்பெற்றன. செந்தமிழ்ச் செல்வியில் திணை ஆய்வு குறித்துத் தொடர்ந்து இளவழகனார் வரைந்த கட்டுரைகள், திணை இலக்கணத்தின் நுட்பங்களைக் காட்டுகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், தமிழாய்வு, தமிழ்க்கலை, ஆராய்ச்சி, புலமை, தமிழ்நாடு, தினமணி ஆகிய இதழ்களில் பழந்தமிழாய்வு குறித்த கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. இவை கீழ்வரும் தலைப்புகளில் வகைப்படுத்தப் பெறலாம்.

1. திணை துறை ஆய்வுகள்
2. உரை ஆய்வுகள்
3. வரலாற்றாய்வுகள்
4. இலக்கண ஆய்வுகள்
5. பண்பாட்டாய்வுகள்
6. சமயநிலை ஆய்வுகள்
7. கலையியல் ஆய்வுகள்
8. கவிதையியல் ஆய்வுகள்
9. உளவியல் ஆய்வுகள்
10. பாடினோர்/பாடப்பெற்றோர் பற்றிய ஆய்வுகள்
11. அறிவியல் செய்திகள் குறித்த ஆய்வுகள்

12. இயற்கைப் பின்புலம் பற்றிய ஆய்வுகள்
13. அறநெறி குறித்த ஆய்வுகள்
14. சமூகவியல் ஆய்வுகள்
15. இலக்கிய இயக்க ஆய்வுகள்
16. ஒப்பியல் ஆய்வுகள்

என்ற பதினாறு தலைப்புக்குரியனவாகக் கடந்த எண்பதாண்டுகளில் பல நூறு கட்டுரைகள் வந்துள்ளன. பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக்கோவைகள், உலகத் தமிழ் மாநாட்டு மலர்கள், ஆய்வுக் கோவைகள், பல்கலைக்கழக ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்புகள், பதிப்பகங்களின் விழா மலர்கள், அரசியல் இயக்க ஏடுகளின் மலர்கள், மணிவிழா, பவளவிழா மலர்கள், பாடநூற் கட்டுரைகள் எனப் பல வகையாகப் பூத்துப் பொலிந்துள்ள பழந்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், கடந்த ஐம்பதாண்டுகளில் செவ்விலக்கிய ஆய்வின் வளர்ச்சியைக் காட்டவே செய்கின்றன சோற்றுப் பதம் போலக் கீழ் வரும் கட்டுரைகள் ஆய்வுமுறை ஒழுங்கிற்கும் ஆழங்காற் பட்ட அறிவு நுணுக்கத்திற்கும் என எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

1. முத்தமிழ் – உ.வே.சாமிநாதையர் (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்
2. குறுந்தொகை – ச.வையாபுரிப்பிள்ளை (கரந்தைக் கட்டுரைக் கோவை)
3. நற்றிணை – தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (தமிழா நினைத்துப்பார்)
4. பதிற்றுப்பத்தில் பாரி மனைவி – வ.சுப.மாணிக்கம் (சிந்தனைக் களங்கள்)
5. முல்லைப்பண் ஆராய்ச்சிகளும் அவற்றின் முடிவுகளும் – வீ.ப.கா.சுந்தரம் (தமிழிசை வளம்)
6. காதலும் கட்டுப்பாடும் – க.கைலாசபதி (ஒப்பிலக்கியம்)
7. குறுந்தொகையில் நெய்தல் திணை – இராஜ. சாம்ப சிவ சர்மா (குறுந்தொகைச் சொற்பொழிவுகள்)

இவை முன்மாதிரியான ஆய்வுகள். இவற்றையொத்த கட்டுரைகள் பல உள்ளன.

பழந்தமிழாய்வு குறித்த தனிநூல்கள் பற்பல தோன்றியுள்ளன. இவற்றில் பெரும்பாலன கீழ்வரும் பகுப்புகளில் அடங்குவன

1. வரலாற்று ஆராய்ச்சி குறித்தன
2. பண்பாட்டு ஆராய்ச்சி குறித்தன
3. நயம் பகரும் ஆராய்ச்சி குறித்தன
4. நூற்பொருள் உரை கூறுவன
5. மொழியியல் குறித்தன.
6. புலவர் திறம் பற்றியன
7. திணை துறைப் பகுப்பாய்வு பற்றியன
8. ஒப்பியல் நோக்கின
9. அகராதிகள்
10. களஞ்சியங்கள் அட்டவணைகள்

இவற்றில் நடுவுநிலை வழீஇய ஆராய்ச்சிகளும் உள்ளன எம்.சீனிவாச ஐயங்கார் எழுதியுள்ள தமிழாய்வு (Tamil studies) என்னும் நூல் குறித்து ந.சுப்பிரமணியன்,

"கனகசபைப் பிள்ளையின் கருத்துக்களுக்கு மாறான நிலையில் தவறுபட எழுதப்பட்ட இந்நூல் தமிழர் பண்பாடு, சமயம், இலக்கியம் குறித்து வெறுப்புற்ற நிலையில் நோக்கியுள்ளது"[5]

என்கிறார். சங்க கால நாட்டு வரலாறு, சங்க இலக்கிய வரலாறு, சங்க இலக்கியக் கொள்கை ஆகியன குறித்த பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

சங்க இலக்கியங்களை மொழியியல் நோக்கில் ஆராய்ந்த முதல் ஆய்வு பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியாருடையது. `History of Grammatical theories in Tamil and their relations to the Grammatical Literature in Sanskrit' என்ற இவரது நூல் 1934 இல் வெளிவந்தது. இவ்வரிசையில் அகத்தியலிங்கம் எழுதியுள்ள 'சங்கத்தமிழ்' எனப் பெயரிய நான்கு நூல்கள் குறிக்கத்தக்கன.

"பிற சங்க இலக்கியங்களில் செய்தேன், செய்தான் போன்ற வாய்பாட்டுச் சொற்கள் அதிகமாக வர, கலித்தொகையில் செய்தவன் செய்தவள் செய்தவர் வாய்பாட்டுச் சொற்கள் அதிகமாகக் காணக் கிடக்கின்றன. கலித்தொகையில் குறிஞ்சிக் கலியில் மட்டும் இத்தகைய சொற்கள் காணப்படக் கபிலரால் பாடப்பட்ட பிற சங்க இலக்கியங்கள் அனைத்திலும் இரு இடங்களே (நல்லவர் புறம் 14.16 வாழ்பவர் நற் 21.7) உள்ளன."[6]

என்று அவர் கூறுவது ஆழ்ந்த ஆராய்ச்சியின் நற்பயனாகும். தனிப் புலவர்களைக் குறித்த ஆய்வில் வே.வேங்கடராஜுலு ரெட்டியாரின் கபிலர், பரணர் என்னும் இருநூல்கள் மிகவும் குறிக்கத்தக்கன. பழந்தமிழ் நூல்களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்தவர்களில் பி.எல்.சாமி, என்.கே.வேலன், செ.வேங்கடராமச் செட்டியார் ஆகிய மூவரும் குறிக்கத்தக்கவர்.

"குருகு என்பதற்கு நாரை, அன்னம் என்று சில உரையாசிரியர்களும், உ.வே.சாமிநாதையரும் பொருள் கொண்டனர். நாரை போன்று சாம்பல் நிறமானதாயினும் குருகு வேறு, நாரை வேறு என்பதை உணர வேண்டும். நாரை நெடிய பறவை, பருமனான பறவை. அன்னம் என்ற பறவையை விடக் குருகு பருமனானது. அன்னத்தைவிட அகன்ற விரல்களும், விரிந்த மடிப்புத் தோலும், விரல்களுக்கிடையில் உள்ளது. முக்கியமாக இதன் கீழலகு தோற்பை போலத் தொங்குவது நாரைக்கும் அன்னத்திற்கும் கிடையாது."[7]

என்று பி.எல்.சாமி கூறுகின்றார். பண்பாட்டாராய்ச்சியில் *'அகப்பாட்டில் இலக்கிய மரபுகள்'* (Literary conventions in Akam Poetry) என்ற கமில் சுவலபில் நூல் தெளிவுடையது.

என்று பி.எல்.சாமி கூறுகின்றார். பண்பாட்டாராய்ச்சியில் *'அகப்பாட்டில் இலக்கிய மரபுகள்'* (Literary conventions in Akam Poetry) என்ற கமில் சுவலபில் நூல் தெளிவுடையது.

"இரண்டு மனித உயிர்களுக்கிடையே காதல் உறவின் இயக்கம் களவு கற்பு எனும் இரு கூறுபட அமையும் அமைப்பினைப் படைப்பிலக்கியம் குறிக்கோள் நெறியில் எடுத்தியம்புகிறது. வடமொழி வட இந்தியச் சார்புடைய இந்துப்பண்பாட்டின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்பாகத் தமிழ் மண்ணுக்கே உரிய எதையும் சாராத தமிழர்களுக்கே இயல்புரிமை கொண்ட தமிழ்ப் பண்பாடு தென்னிந்தியாவில் நிலவியது என்பது மறுத்துரைக்க முடியாத உண்மையாகும்."[8]

அயல்மொழியாளர் ஒருவரின் குரல் தமிழ்க் கருத்தை எவ்வளவு சிறப்பாக எடுத்துரைக்கிறது என்பதைக் காணவேண்டும். பத்துப்பாட்டையே சங்க இலக்கியம் இல்லை எனக் கூறும் ஜான்மார் சுவலபிலிடமிருந்து பல கருத்துக்களில் வேறுபடுகிறார். (The Eight anthologies A study in early Tamil Literature)

பழந்தமிழ் நூல்களை ஆராய்வார்க்கு, அதற்கென்று சில நெறிகள் உள்ளன என்பது விளங்கியிருத்தல் வேண்டும். அந்நூல்களை ஆராயும் முறை வேறு; சமயநூல்களை ஆராயும் முறை வேறு; பிற்காலக் கவிதைகளை ஆராயும் முறை வேறு. இம்முறைகளில் தலையாயது புலனெறி வழக்கு இன்னதென அறிந்தாராய்தல். ஈ.கோ.பாஸ்கரதாஸ் அகப்பொருள் பாடல்களில் தோழி என்னும் அவரது நூலில்,

"உலகியலில் காதலியின் தோழிக்கும் காதலனுக்கும் தொடர்பு ஏற்படல் அருகிய நிகழ்ச்சி. களவுக் காலத்தில் கருக்கொள்ளல், திருமணத்திற்கு முன்னரே குழந்தை பிறத்தல், காதலியையும் காதலன் கைவிடல், களவு அல்லது கற்பு நிலையில் தலைவியோ அல்லது தலைவனோ இறத்தல் ஆகிய இன்னோரன்ன நிகழ்ச்சிகள் அருகிய நிகழ்ச்சிகள் மற்றும் கூடா நிகழ்ச்சிகள். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சங்கப் புலவர்கள் அன்பின் ஐந்திணையுள் அடக்கவில்லை... பண்பாட்டையும் நாகரிகத்தையும் பாதிக்கும் வகையில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் ஒரோவழி உலகியலில் நிகழ்ந்திருத்தல் கூடும். எனினும் அவற்றை இலக்கியத்துள் சேர்க்கச் சங்கப் பாவாணர் விரும்பவில்லை."[9]

என்று குறிப்பிடுவது நல்ல ஆராய்ச்சி முறைக்குரிய அடித்தளமாகும். அக இலக்கியங்களை ஆய்வோர், கூற்று, முன்னம், நோக்கு, உள்ளுறை, இறைச்சி என்ற ஐந்தையும் மிக நுணித்தறிவதோடு, அவற்றைச் செய்யுட்களில் பொருத்திக் காண்பதில் கடைப்பிடிக்க வேண்டிய ஆய்வு நெறிகளைத் தமிழண்ணலின் நோக்கு, இறைச்சி, உள்ளுறை முதலிய தனிநூல்களிற் காணலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய இருக்கையில் பணியமர்ந்து யான் படைத்த 'சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்' 'சங்க இலக்கியத்தில் கலையும் கலைக் கோட்பாடும்' 'சங்க இலக்கிய ஆய்வேடுகளின் மதிப்பீடு' 'சங்க இலக்கியக் கொள்கை' ஆகிய நூல்கள் பழந்தமிழிலக்கியத்தில் யான் கண்ட ஆழ்நிலை மெய்ம்மைகளை விளக்குவன.

உ.வே.சா சங்க இலக்கியங்களை வெளிக்கொணர்ந்த பின் பழந்தமிழ் இலக்கியங்கள் பரந்த படிப்புக்குரியவையாயின. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், இ.வை.அனந்தராமையர், சி.வை.தாமோதரம் பிள்ளை, ஒளவை துரைசாமிப்பிள்ளை, சௌரிப் பெருமாள் அரங்கனார், இராஜ கோபாலார்யன், இரா.இராகவையங்கார் ஆகியோர் பழந் தமிழிலக்கியங்களை அரும்பாடுபட்டுப் பதிப்பித்து வெளியிட்டனர். பின்னர் இவை உயர்வகுப்புகட்குப் பாடமாகவும் ஆராய்ச்சிப் பொருளாகவும் அமைந்தன. சங்க இலக்கியத்தில் முதல் முனைவர்ப் பட்டத்திற்கான ஆய்வு மு.வரதராசனாருடையது. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (The treatment of Nature in Sangam Literature) என்ற தலைப்பில் இந்த ஆய்வேடு அமைந்தது. சங்க இலக்கிய ஆய்வுகளில் குறிக்கத்தக்கன வ.சுப.மாணிக்கத்தின் *தமிழ்க் காதல்,* (The Concept of Tamil Love) கைலாசபதியின் *தமிழ் வீரநிலைக் கவிதை* (*Tamil Heroic Poetry*) தமிழண்ணலின் சங்க மரபு (The tradition and Talent in Sangam poetry) கு.வெ.பாலசுப்பிரமணியனின் 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' ந.சுப்பிரமணியனின் 'சங்க கால வாழ்வியல்' (Sangam polity) வ.த.மாணிக்கத்தின் 'மருதம்' லீலாவதியின் 'குறுந்தொகை ஓர் ஆய்வு' (A *critical Study of Kuruntokai*) என்பனவும் பிறவும் அச்சில் வந்துள்ளன. பல ஆய்வேடுகளின் திறனையும் மதிப்பீட்டையும் எனது 'சங்க இலக்கிய ஆய்வுகளின் மதிப்பீடு' என்னும் நூலில் விரிவுறக் காணலாம்.

பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகளில் அறிஞர்கள் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ள ஆய்வுமுறை பகுப்பாய்வு (Analytical method) முறையேயாம். கட்டமைப்பியல், விளக்கவியல், வரலாற்றியல் முறைகளும் பல ஆய்வேடுகளில் அமையக் காணலாம்.

"சங்கப் பாடல்களின் தொகை 2379. சிதைவில்லா முழுமையுடையன 2354 இவற்றுள் அகத்திணைக்குரியன 1859. புறத்திணைக்குரியன 459. இப்பாடல்களைப் பாடிய புலவர்களின் தொகை 473... களவு குறிஞ்சிக்குரியது எனினும் குறிஞ்சியும் நெய்தலும் களவைப் பாடும் திணைகளாகின்றன. முல்லையும் மருதமும் கற்பைப் பாடுகின்றன. பாலை இரண்டையும் புனைகின்றது கிடைக்கும் 488 குறிஞ்சித் திணைப்பாடல்களில் தோழியிற் கூட்டம் பற்றிக் கூறுவன 458 ஆகும். இதனால் தோழியின் இன்றியமையாமை புலப்படும் "[10]

இவ்வாறு வகுத்தும் தொகுத்தும் காணும் ஆராய்ச்சிகள் பழைய இலக்கியங்களின் உண்மை இருப்பு நிலையை (Real Existence) காட்டின.

பாட்டுக்கு நயங்காணுதலே ஆராய்ச்சி என்றிருந்த நிலை மாறியிருக்கிறது. இக்காலத்தில் இலக்கியத்தை மானுடவியல், உளவியல், மொழியியல், சமூகவியல் துறையினர் அமைப்பியல் வாதக் கண்கொண்டு நோக்குகின்றனர். ***நார்த்ரோ ப்ரை*** என்ற மானுட நூல் வல்லார் இலக்கியத்தை அமைப்பியல் வாத நோக்கில் ஆராயத் தொடங்கினார். இலக்கியத்திற்கு ஓர் உள்ளார்ந்த இலக்கண வடிவம் உள்ளதென்றும் அதுவே கவிதைமொழி எனத்தக்கதென்றும் அமைப்பியல் வாதக் கருத்தினர் ஆராய்ந்தனர். இதனை இலக்கிய அறிவியல் ஆய்வு எனக் குறிக்கலாம். இத்தகைய நோக்கில் சங்க இலக்கியத்தின் திணை, கூற்று, உள்ளுறை, இறைச்சி என்பன ஆராயத்தக்கன. இவ்வகை ஆய்வில் நம் தமிழ் உலகம் ஓரளவு சென்றிருக்கிறது. மேலும் ஆழமாகச் செல்ல வேண்டும்.

ஒரு பாட்டின் புற வடிவம், அகவடிவம் என்ற இரண்டு நிலைகளின் அமைப்பியலைப் பாட்டுக்கு உருவம் தரும் புறநிலை (Parole) என்றும் அதன் அகநிலை (Langue) என்றும் சசூரால் பிரித்தறியப்படும் மொழியின் இருவேறு நிலைகளைப் பகுத்தறிந்து பின்னர் உளவியல் சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் செய்யப்பெறும் ஆய்வுகள் இன்று பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகளிலும் முகம் காட்டுகின்றன.

புதிய ஆய்வு முறைகள் பலவற்றுக்கும் இடந்தருவதாகப் பழந்தமிழ் இலக்கியம் அமைந்திருக்கிறது. இவற்றால் எதிர்காலத்தில் பழந்தமிழ்ப் பனுவல்கள் மேலும் விளக்கம் பெறலாம்.

அடிக்குறிப்புகள் :

1. என் சரித்திரம் ப.737
2. பத்துப்பாட்டு உ.வே.சா.பதிப்பு முன்னுரை ப.XXXIX
3. குறுந்தொகை உ.வே.சா.பதிப்பு முன்னுரை ப.XI
4. சங்க இலக்கிய ஆய்வுகளின் *மதிப்பீடு, கு.வெ.பாலசுப்பிரமணியன்* ப.451–52
5. Sangam polity N.Subramanian P xii
6. A Grammar of old Tamil A.Agasthialingam P 112
7. சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் பி.எல்.சாமி ப.18–19
8. Literary Conventions in Akam poetry, Kamil zvelebil P 5
9. அகப்பொருள் பாடல்களில் தோழி ா.கோ பாஸ்கரதாஸ் ப.4
10. Tradition and Talent in Cankam poetry P 2

++++++

கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

முனைவர். ச.ஸ்ரீமதி, எம்.ஏ.,எம்.ஃபில் ,பிஎச் டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி,
திருச்செந்தூர்.
கைபேசி : 94891 23887

முன்னுரை :

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"[1]

என்று ஏற்றிப் போற்றுவான் எட்டயபுரத்துக்கவி; வள்ளுவன் கலைஞருள் கலைஞன்; கவிஞருள் தலைசிறந்த கவிஞன். அத்துடன் நில்லாது, உலக அறிஞருள் ஒப்புயர்வற்ற வான்பேரறிஞனாகவும் விளங்குகின்றான். அம்மாபெரும்புலவன் வழிவந்த நூல், அவன் தமிழ்த்தாய்க்குப் பாமாலையாகப் படைத்தநூல், மனித அறிவை மேம்படச் செய்யும் திருக்குறள் இந்நூல் 1330 மணம்மிகு மலர்களைக் கொண்ட ஒரு பெரிய பூங்கொத்து. இதன் மணம் தமிழ்ப்பூஞ்சோலையில் மலர்ந்துள்ள மற்றெல்லா மலர்களிலும் ஊடுருவி நிலைபெற்றுள்ளது. இது உலகப் பொதுநூல் மட்டுமின்றிக் காலப்பொதுநூல் ஆகும். அறம், பொருள், இன்பம் இதன் முப்பெரும் குறிக்கோள். ஏழுகடலை உள்புகட்டிய குறளைத் தந்த பொய்யாமொழியார் இன்முகத்தோடு இனியவை கூற வருகிறார். இனி, அவைகளைப் பார்ப்போம்.

இனிமை எங்கே :

தென்றல் இனிமை, சந்தனம் இனிமை–இவை உடலுக்கு. தேன் இனிமை, பால் இனிமை – இவை நாவுக்கு; கன்னியாகுமரியின் சூரியோதயம் இனிமை, மஞ்சு கொஞ்சிடும் மாஞ்சோலை இனிமை– இவை கண்ணுக்கு; முல்லை இனிமை, இருவாச்சி இனிமை–இவை நாசிக்கு; வீணை எழுப்பும் கீதம் இனிமை, யாழில் பிறக்கும் இசை இனிமை –இவை செவிக்கு. இவை மட்டுமா இனிமை? குழலும் இனிமை. யாழும் இனிமை. இதைக்காட்டிலும் மிக இனிமை, முந்தித்தவம் கிடந்து, முந்நூறு நாள் சுமந்து, அந்தி பகலாய் இறைவனை வந்தித்து குந்தி சரிய ஒரு தாய் ஈன்றெடுத்த மகனின் மழலைச்சொல் மழலையின் மழலைச்சொல், கறையற்ற இறைவனின் மறைமொழியின் மறுபதிப்பு. அம்மொழி, செம்மையின் பிறப்பிடம், உண்மையின் உறைவிடம், நேர்மையின் நிலைக்களம், தீமையின் நிழல்கூட அதில் படிவதில்லை.

எல்லையில்லாப் பெருமையினைத் தனதாக்கிக் கொண்ட மழலையின் இன்சொல், காலத்தால் செல்லரிக்கப்பட்டு வன்சொல்லானது ஏன்? ஆகாயத்தில் இருந்து விழுகின்ற மழைநீர் இம்மியும் மாசின்றி பூமியில் பெய்கின்றது. பெய்கின்ற நீர் பள்ளத்தைக் கண்டு பாய்ந்தோடும்போது பாய்கின்ற மண்ணின் தன்மையதாய் மாறிவிடும். அதைப்போன்று தான், மழலையின் தீதற்ற இன்சொல், ஞாலத்தில் கூடா ஒழுக்கம், சிற்றினம் சேர்தல், கல்லாமை, தீநட்பு, கூடாநட்பு இவற்றோடு கூடி, வன்சொல் என்ற வசைமொழியை ஈன்றெடுக்கிறது.

வான்புகழ் வள்ளுவன், சொல்லிய சொல் தவறாதவன். நல்ல கருத்துக்களை நயம்படச் சொல்லிச் சென்ற நல்லோன். எனவே இன்சொல்லையும் வன்சொல்லையும் மோதவிட்டுச் சாதனை படைக்க எண்ணுகிறான்.

அன்னத்தின் முன்னாலே, கிண்ணத்தில் பாலையும், நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும்தானே பருகுகின்றது அன்னம். அது பறவை, ஆம்! அதற்கு ஐந்தறிவு. ஆழக்குழி எடுத்ததினால் வந்த மணல்குன்று ஒரு பக்கம். குன்றிமணி அளவு அடியில் கிடைத்த வைரம் ஒரு பக்கம். முத்தை ஈன்ற சிப்பி ஒரு பக்கம், முத்து ஒரு பக்கம். எதை? யார் கொள்வது? அன்னத்தைப் போலே உணர்ந்தவன் தேர்ந்தெடுப்பது நல்முத்தும், வைரமும் தானே. அதைப்போன்றுதான் இந்த உலகத்தில் முத்தான, கனியான, இனிய சொற்கள் பல இருக்க, மதியைக் கெடுக்கும் துயரைக் கொடுக்கும் தீய சொற்களை உரைத்தலை, தனது அறம் என்னும் உரைகல்லில் வைத்து, உரைத்துப் பார்த்து உரைக்கின்றான்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" [2]

பஞ்சவரின் இல்லாள் பாஞ்சாலி கெஞ்சிய போது, நெஞ்சகத்தில் இரக்கமின்றி, வஞ்சகத்தின் பிறப்பிடமாம் துரியன், தன் தொடை மீது அமரடி என்று சொன்னதற்காய், தொடையில் அடிபட்டு, அடிபட்டுப் போனானே. இது கனி இருக்கின்ற போது, காயைச் சாப்பிட்ட குற்றம்,

"மறைநா ஓசை யல்லது யாவதும்
மணிநா வோசை கேட்டது மிலனே" [3]

என்று மதுராபுரி தெய்வத்தால் ஏற்றிப் போற்றப்பட்ட பாண்டிய மன்னன் பரம்பரையில் வந்த பாண்டியன் நெஞ்செழியன், ஆத்திரத்தில் சொல்லிய அவசர வார்த்தையினால் நடந்தது என்ன?

தன் மனையாளின் சிலம்பினைக் களவாடிய கள்வனை, *'கொண்டு வா'* என்பதற்குப் பதிலாக, 'கொன்றுவா' என்றதினால், வளையாத

செங்கோல் வளைந்து பட்டதே. இது கனியிருக்கின்ற போது, காயைச் சாப்பிட்ட குற்றம். இன்சொல் என்பதுதான் என்ன?

அன்பு கலந்து, வஞ்சனை இல்லாது, அறத்தினை உணர்ந்தவன் வாய்ச்சொல்தான் இன்சொல். முகமலர்ச்சியோடு உணர்வு பொங்க, உள்ளத்தில் இருந்து வரும் சொல்தான் இன்சொல் ஒருவனுக்குப் பண்புகள் பல அணி செய்தாலும், அவற்றில் தலையானது இன்சொல். பாவங்களைப் போக்கி, அறத்தினைக் காக்கும் சொல்தான் இன்சொல். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைக் கொடுக்கும் சொல்தான் இன்சொல்.

பிரிட்டோரியா நகர் வீதியிலே, கறுப்பன் செல்லலாமா? என்ற கேள்வியோடு, காந்தியைக் கன்னத்தில் அறைந்தான் வெள்ளையன் ஒருவன். காந்திமகான் உடனே, சினம் என்னும் குன்றேறி நின்று கூற்றுவனைக் காட்டிலும் சீற்றமிகு வார்த்தைகளால் சுட்டெரிக்கவில்லை. அடித்தவனின் கையைப் பிடித்து அன்பாலே தடவி முத்தமிட்டு, அடிபட்ட என் கன்னமே இத்தனை வலி வலிக்குதென்றால், அடித்த உங்கள் கைக்கு என்ன வலி ஏற்பட்டிருக்கும்? என்று, அடிபட்டுப் பல்போன பிறகும், கனிவான இன்சொல் பேசினார். காந்தியின் அந்தக்கருணை உள்ளத்தால் ஈர்க்கப்பட்ட வெள்ளையன் காந்தியின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்பது எந்தத் தலைமுறையிலும் எதிரொலிக்கும் அல்லவா?

எனவே, தேமதுரத் தமிழின் அமுதமாம் இனிய கலைச்சொற்கள் பல இருக்க, பகட்டுக்காகப் பல மொழி பேசும் கலப்படக்காரர்களின் கண்மூடித்தனத்தைக் கருத்தில் கொண்டு, "*கனியிருப்பக் காய் கவர்ந்தற்று*" என்று, கருத்தாழத்தோடு கண்டித்திருப்பானோ? அம் மாபெரும் புலவன் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே வாழ்வுக்கு ஒளியாக நிற்கும், கனியான இன்சொல் பேசி, அவனியில் நனிசிறக்க வாழ்ந்திடுவோம். வாழ்க வள்ளுவம்!

++++++

கம்பனில் போர்

முனைவர் **உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 021.
அலைபேசி : 94435 71776

சென்ற இதழ்—தொடர்ச்சி :

இறுதிப் போர் :

இராவணன் கோபுரத்தின் உச்சியில் ஏறிப் பார்த்த பின்னர், அரண்மனைக்குச் சென்று தான–தருமம் செய்கின்றான். மீண்டும் போருக்குத் தயாராகின்றான். இப்போது மூன்றாம் முறையாகப் போருக்குச் செல்லும் இராவணன் போக்கில் ஒரு பெரிய மாற்றம் காணப்படுகின்றது. அவன் இராமனின் மனைவி சீதை என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றான். இன்றைய போர் முடிவில் இராமனை இழந்து அவன் மனைவி சீதை அழ வேண்டும் அல்லது என்னை இழந்து என் மனைவி மண்டோதரி அழ வேண்டும் என்கின்றான். இராமனும் இராவணனும் போர்க்களத்தில் மோதுகின்றனர். இராவணன் படிப்படியாக மனம் மாறித் தன் தவற்றை உணர்கின்றான். ஆயினும், அவற்றைத் துணிவுடன் ஏற்றுச் செயல்படுத்த முன்வரவில்லை. இராவணனின் சுத்த வீரத்தன்மையைக் கம்பன், *"ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவது ஆனான்"* என்கின்றான். போர்க்களத்தில் நின்ற இராவணனுக்குத் தெளிந்த சிந்தனை இப்பொழுது தான் ஏற்படுகின்றது. தன்னை எதிர்த்துப் போரிடுபவன் மனிதன் அல்லன்; அவன் பரம்பொருள் என உணர்கின்றான்

"சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன் திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்
இவனோதான் அவ்வேத முதல் காரணன் என்றான்"

(கம்பரா.பா.எண்.9837)

இராமன் இராவணனது தலையில் ஒன்றை அம்பினால் கொய்து வீழ்த்துகின்றான். இந்த அரிய பேறு தவத்தினால் மட்டுமே கிடைக்கும். இராவணன் கைகள் வெட்டப்படுகின்றன. தலைகள் ஒவ்வொன்றாக வீழ்த்தப்படுகின்றன. இராமனுடைய பிரமன் அம்பும் சக்கராயுதமும் சேர்ந்து தாக்கியதால் இராவணன் உயிரிழக்கின்றான். தீயவர்களுக்கும் அரக்கர்களுக்கும் இறைவன் அருளிச் செய்யும் வரமும் வீரமும் நிற்காது போலும். இதனைக் கம்பன்,

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்நாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்பருகி புறம்போயிற்று
இராகவன் தன்புனித வாளி"

(கம்பரா.9899) என்கின்றான்.

இராவணன் வீழ்ந்த சீர்மை :

இராவணன் போர்க்களத்தில் மடிந்து கிடக்கின்றான். அவன் கீழ்மையானவனும் கோழையும் அல்லன்; சுத்த வீரன். இறுதிவரையில் வீரவேள்வியே செய்தவன். போர்க்களத்தில் மாண்டு கிடக்கும் இராவணனை இராமன் சென்று பார்க்கின்றான்.

"போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, உரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான்" (கம்ப.9909).

இராவணன் போர்களில் எவருக்கும் புறங்கொடாதவன்; இராம–இராவணப் போரில் கூட அவன் வீரப்போரே செய்தான்; புறமுதுகு காட்டி ஓடவில்லை; இத்தகைய இராவணனை இராமன் கண்டான். இராவணனை எவராலும் எளிதில் வெல்ல இயலாது. இராமனே அவனை வென்றதற்குக் காரணம் இராமனின் வீரமன்று; இராவணன் சீதையிடம் கொண்ட காதலே; இராமனின் சினமும் உடன் நின்று இராவணனை வெல்ல முடிந்தது என்கின்றான் வியீடணன்

இராவணன் மாண்டு பிணமான பின்னர் அவன் முகம் மும்மடங்கு பொலிவுடன் காணப்பட்டதாகக் கம்பன் கூறுகின்றான்

1. இராவணன் சீதையைத் தன்மனச் சிறையிலிருந்து விடுவித்ததில் ஏற்பட்ட பொலிவு.
2. இராவணன் இராமனை 'நல்லதோர் பகை' எனக் கொண்டதால் ஏற்பட்ட பொலிவு.
3. இராமன் பரம்பொருள் எனத் தெரிந்தும் புகழ் ஒன்றையே விரும்பி இறக்கும் வரையில் இராவணன் அவனுடன் போரிட்டதால் ஏற்பட்ட பொலிவு

யாரொடும் பகை கொள்வற்க :

கம்பன் போரையும் பகையையும் விரும்பவில்லை. அவன் 'யாரொடும் பகை கொள்ளக் கூடாது' என்னும் வாழ்க்கை நெறியையே வலியுறுத்துகின்றான்.

"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது; தன்
தார் ஒடுங்கல் செல்லாது; அது தந்தபின்
வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?"

(கம்ப 1419).

என்கின்றான் கம்பன். கருத்து வேற்றுமைகள் வரலாம்; உடன்பாடு ஏற்படாமலும்

போகலாம். இவை பகையாக வளரவேண்டுமென்ற அவசியமில்லை. அவ்வாறு வளர்ந்தால் பகைவரின் கலகம், போர் முதலிய அழிவுச் செயல்களால் மக்கள் துன்புறுவர். கம்பன் இதனை விரும்பாமல் உயிர்க்குல ஒருமைப்பாட்டையும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டையுமே விழைகின்றான். இராமன் காட்டிற்கு வந்த பின்னர் அவனுடன் உடன் பிறந்தவர்கள் எண்ணிக்கை ஏழாகின்றது.

"குகனோடு ஐவர் ஆனோம் முன்பு; பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகலருங் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை"

(கம்பரா. 6507).

இன்று பல நாள் பழகினாலும் உடன்பிறப்பாளரை, உறவினரைத் தேர்ந்தெடுக்க இயலாத நிலையில் அன்பு ஊற்று சுயநலத்தாலும் ஆணவத்தாலும் தூர்ந்து கொண்டு வருகின்றது. இது சமுதாய வாழ்வுக்கு ஏற்றதன்று என்பதால் கம்பன் பகையைத் தவிர்க்கும்படி அறிவுறுத்துகின்றான். பகையைத் தவிர்த்தால் போர் ஒடுங்கும் என்பது கம்பன் கருத்து. போர் ஒடுங்கினால் உலகில் புகழும் அமைதியும் நிலவும் என்பதே கம்பன் கருத்து. நல்லதை அமைதி வழியாகவும் சாதிக்கலாம். எந்தப் போரும் சிக்கலைத் தீர்த்ததாக வரலாறு இல்லை. போரின் வாயிலாகச் சிக்கல்களே வளர்ந்துள்ளன. மக்களிடம் வஞ்சினமும் மன உளைச்சலும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

போர் செய்வது அரசனின் ஒழுக்கம் என்றிருந்த சங்க காலத்திலேயே ஔவையார், அதியமான் தொண்டைமானின் போரைத் தவிர்க்கத் தூது சென்றுள்ளார். 'சமாதானம் செய்து வைப்பவர்கள் பாக்கியவான்கள்' என்று சமய நூல்கள் அனைத்துமே கூறுகின்றன. கம்பன் இராமகாதையில் இராவணனின் உறவுச் சுற்றங்கள் வாயிலாகப் போரைத் தவிர்க்கும் படி இராவணனுக்கு அறிவுரை கூறி அறிவுறுத்துகின்றான். இராமனின் நோக்கம் இராவணனுடன் போர்தொடுப்பதன்று. சீதையை மீட்பது ஒன்றே அவனது குறிக்கோள். இராவணன் சீதையை விடுதலை செய்திருந்தால் இராம–இராவண யுத்தமே நடந்திருக்க வாய்ப்பில்லை. இராவணன் சீதையைக் கவர்ந்ததும் நினைத்ததுமாகிய குற்றத்தை இராமன் மறந்திருப்பான். இதனை மாலியவான் கூற்றாகக் கம்பன் வெளிப்படுத்துகின்றான். ஆயினும் இராவணன் இதில் எதற்கும் உடன்படவில்லை.

1. இராமனின் போர்த் தந்திரங்கள் :

இராமன் இன்பம் – துன்பம் என்னும் இருநிலையிலும் சமநிலை மன உணர்வு கொண்டவன். போர்க்காலத்திலும் இராமன் இந்தச் சமநிலை அறிவையே பயன்படுத்துகின்றான். முதல்நாள் போரில் இராவணனின் வில்லை இராமன் ஒடித்து, இராவணனை நிராயுதபாணி ஆக்குகின்றான். அப்பொழுது இராமனின் மனநிலையைக் கம்பன்,

"முறுவல் எய்திய முகத்தினன்; முளரிஅம் கண்ணன்
மறு இலாதது ஓர்வடிக்கணை தொடுத்து உறவாங்கி
இறுதிஎய்தும் நாள்கால்பொர, மந்தரம் இடையிட்டு
அறுவதுஆம் என ராவணன் சிலையினை அறுத்தான்"

(கம்ப.யுத்த முதற்போர்புரி படலம். பா.240)

பாரதப் போரில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுணனிடம்,

"ஆசையையும் மமகாரத்தையும் அகற்றி மனக்கொதிப்பு இன்றிப் போர் புரிவாயாக!" (கீதை. III : 30)

எனக் கூறும் கீதையின் உபதேசத்திற்கு நற்சான்றாகத் திகழ்கின்றான் இராமன். முதல்நாள் போரின் முடிவில் இராவணன் தன் பாட்டனாகிய மாலியவானிடம் இராமனின் அச்செயலை,

"எறித்த போர் அரக்கர் ஆவிஎண்ணிலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோது என்னை அந்தப் பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோது அன்னான் அந்தக் கூனிகூன்போக உண்டை
செறித்தபோது ஒத்தது அன்றிச் சினம் உண்மை தெரிந்தது இல்லை"

(கம்ப. கும்பகர்ணன் வதைப்படலம், பா.17)

எனக் கூறுகின்றான்.

2. இராமனின் பெருந்தன்மை :

தன் தவற்றை ஒப்புக்கொள்ளும் பெருந்தன்மை இராமனிடம் இருந்தது. இராமன் தன் சிறுவயதில் கூனியிடம் விளையாட்டாக மண் உருண்டைகளை எறிந்து விளையாடியது தவறு என்றும், அதனால்தான் இராமன் தற்பொழுது கூனியின் செயலாக்கத்தால் இவ்வாறு துன்பப்படுவதாகவும், மற்றவர்கள் சிறியவர்களாக இருந்தாலும் அவர்கள் மனம் புண்படுமாறு நடந்து கொள்ளக் கூடாது எனச் சுக்கிரீவனுக்கு அறிவுரை கூறுவதோடு, தன் தவற்றை ஒப்புக் கொள்ளும் பெருந்தன்மையும் இராமனிடம் காணப்படுகிறது.

"சிறியர்என்று இகழ்ந்துநோவு செய்வனசெய்யல்; மற்றுஇந்
நெறியிகழ்ந்து யானோர்தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியதுஆம் மேனிஆய கூனியால், குவவுத்தோளாய்!
வெறியனஎய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்"

(கிட்கிந்தா.அரசியல் படலம், 12)

பஞ்சவடியில் மாரீச மான் விசயத்தில் இராமனின் கணிப்பு தவறாகிவிட்டது. தாரத்தின் கோபத்திற்கும் தம்பியின் தாபத்திற்கும் ஆட்படும் இராமன், இறுதியில் இலக்குவன் கூற்றின் உண்மையையும், தன் செயலின் தவற்றையும் ஒப்புக் கொள்கின்றான் கிட்டத்தட்ட 11 மாதங்களுக்குப் பின்னர் இராம—இராவணப் போரில் இந்திரசித்தின் அயன்படையால் இலக்குவன் வீழ்ந்த போது, மாரீசன் மாயமான் நிகழ்வை நினைத்து இராமன் வருந்துகின்றான்.

"மாயை இம்மான் எனஎம்பி, வாய்மையான்
தூயன உறுதிகள் சொன்ன சொல் கொளேன்
போயினென் பெண்உரை மறாது போகலால்
ஆயதுஇப் பழியுடைய மரணம் அன்பினீர்!"

(கம்ப.மருத்துமலை 71)

3. பிறர் கருத்தை மதித்தல் :

அனுமன் இலங்கையில் சீதையைக் கண்டு இராமனிடம் மீள்கின்றான். 10 மாதம் சீதையின் பிரிவால் வாடிய இராமன், அனுமன் தந்த சீதையின் சூடாமணியைக் கண்டு மகிழ்கின்றான். நிலைமையை உன்னிப்பாக ஆராய்ந்த

சுக்கிரீவன் அனுமன் சீதையைக் கண்டுவந்த செய்தி அரக்கர்களுக்குத் தெரிந்துவிட்டது. காலம் தாழ்த்தினால் அரக்கர்கள் சீதையை வேறிடத்திற்கு மாற்றுவார்கள் அல்லது அவளை மேலும் கொடுமைப்படுத்துவார்கள். ஆதலால் உடனே இலங்கையை நோக்கிப் படையைச் செலுத்த வேண்டும் என்கிறான் சுக்கிரீவன். அவன் ஆலோசனைப்படி உடனே படைகள் இலங்கைக்குப் புறப்பட ஆணையிடுகின்றான் இராமன்.

"ஆண்டையின் அருக்கன் மைந்தன், ஐயகேள்! அரிவை நம்மால்
காண்டலுக்கு எளியள் ஆனாள் என்றதும் காலம் தாழ
ஈண்டு இனும் இருத்தி போலாம் என்றனன், என்ற லோடும்
தூண் திரண்டனைய தோளான் பொருகென எழுந்து போனான்"

(கம்ப.திருவடிதொழுதபடலம். பா.49)

4. பிறர் திறமையைக் கண்டு ஊக்குவித்தலும் செயற்படுத்துதலும்.

இராமனுடைய போர்த் தந்திரங்களில் ஒன்று திறமை மிக்கவரைத் தேர்ந்தெடுத்துத் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது. இராம இராவணப் போருக்கு முன்னர் தூதனுப்ப இராமன் விரும்புகின்றான் விபீடணனும் சுக்கிரீவனும் ஏற்க, இலக்குவன் எதிர்க்கிறான். அவனை அமைதிப்படுத்தி இரண்டாம் முறை இராவணனிடம் தூது செல்ல வாலியின் மகன் அங்கதனைத் தேர்வு செய்கின்றான். வாலி அங்கதனை இராமனிடம் அடைக்கலமாக ஒப்படைக்கும் போது, "இராமா! இவன் சிறுவனன்று. அரக்கருடன் உனக்கு ஏற்படும் போரில் அந்த அரக்கப் பஞ்சுப் பொதியைப் பொசுக்கும் நெருப்பாக இவன் இருப்பான்" எனக் கூறியதை மனத்திற் கொண்டு அங்கதனைத் தூதனுப்பினான்

"மாருதி இன்னம்செல்லின் மற்றிவன் அன்றிவந்து
சாருநர் வலியோர் இல்லை என்பதும் சாரும் அன்றே!
ஆர்இ ஏகத் தக்கார்? அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்பரேனும் தீதின்றி மீள வல்லான்"

(கம்ப. அங்கதன் தூதுப். பா.9)

தூது செல்பவன் எதிரிகள் தம்மைத் தாக்கினால் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு சாமர்த்தியமாகத் தப்பிக்க வேண்டும் இராமனின் இப்பேச்சைக் கேட்டு அங்கதன் பரபரப்புடன் செயல்படுகின்றான். இதனால் அங்கதன்,

"மாருதி அல்லனாகில் யான் எனும் மாற்றம் பெற்றேன்
யார்இனி என்னோடு ஒப்பார்? என்பதோர் இன்பம் உற்றான்"

(அங்கதன் தூதுப்படலம், பா.13)

கிட்கிந்தையில் புறப்பட்ட வானரப்படை 12 நாட்கள் காடு மலைகளைக் கடந்து கடற்கரைக்கு வந்தது. அப்படைகள் பேரதிர்ச்சி அடைந்தன. ஏற்கனவே பயணத்தால் ஏற்பட்ட களைப்பு வேறு. கடலைக் கடப்பது குறித்த ஐயத்தால் ஏற்பட்ட சஞ்சலம், திருப்புல்லாணியில் இராமன் வருண பகவானை வேண்டித் தவம் செய்த ஒருவார காலம் உறுதியின்மையால் ஏற்பட்ட மனக்கலக்கம், பின்னர் சேதுஅணை கட்டுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் பின்னர் இலங்கைத் தீவை அடைந்த

வானரப் படைகள் இராவணனின் கோட்டை, அகழிகளைக் கண்டு அரண்டு போனது, இவர்களுடைய சோர்வை நீக்கச் சுக்கிரீவன்–இராவணன் மோதல் தேவைப்பட்டது. இதைக் கண்ட வானரப் படைகள் உற்சாகம் பெற்றன.

வானரப்படையின் அளவு எழுபது வெள்ளம். ஒரு வெள்ளம் என்பது பல கோடிகளைக் குறிக்கும் ஒரு அளவு. இராவணன் படையின் அளவு ஆயிரம் வெள்ளம். மூலபலப்படையே முந்நூறு வெள்ளம். அரக்கர் படையில் தேர், குதிரை, யானை, காலாட்படை என்னும் நான்கு பிரிவுகள் இருந்தன. பல்வேறு ஆயுதங்களும் மாயப் போர்முறைகளும் அரக்கர்களிடம் இருந்தன. ஆயினும் இராமன் பெற்ற வானரப்படையிடம் மரமும் மலையும் நகமும் பல்லும் வாலுமே ஆயுதங்கள். இப்படையைக் கொண்டு இராமன் இராவணனை வென்றதற்கு அவனது போர்த் தந்திரமே காரணமாகும்.

5. தந்திரமாகப் பின் வாங்குதல் :

இலங்கைப் போரில் இராமன் பின்வாங்கும் தந்திர உத்தியில் வெற்றி பெறுகின்றான். கோட்டையைச் சுற்றி அகழி தூர்க்கப்பட்டதும் இராமன், மதில் மேல் ஏறிய பின்னர் மதில் மேல் நின்றுகொண்டே அரக்கர்களைத் தாக்குதல் வேண்டும்; கோட்டைக்குள் சென்று விடக் கூடாது என்று வானரப் படைகளுக்குக் கட்டளையிடுகின்றான். வானரங்களின் இந்தத் தாக்குதல் களைத் தாங்கமுடியாமல் அரக்கர்கள் மதிலேறித் தாக்கும் போது, வானரங்கள் பின்வாங்கி ஓடி வந்துவிட வேண்டும்.

6. மின்னல் வேகப் போர்முறை :

வரலாற்றுச் சிறப்புமிக்க இராம–இராவணன் நேரடி மோதலைக் காணத் தேவர்கள் வானத்தில் வந்து கூடினர். இராம–இராவண முதல் மோதலைக் கம்பன் 23 பாடல்களில் பாடியுள்ளான்.

"சொல்லும் அத்தனை அளவையில் மணிமுடி துறந்தான்
எல்இமைத்து எழுமதியமும் ஞாயிறும் எழுந்த
அல்லும் ஒத்தனன் பகலும் ஒத்தனன் அமர்பொருமேல்
வெல்லும் அத்தனை அளவு தோற்றிலா விறலோன்"

(முதற்போர்புரி படலம், பா.27)

கண்ணிமைக்கும் நேரத்தில் இராவணன் நிராதயுதபாணி ஆனான். சிவன் அவனுக்குத் தந்த ஆயுதமும் பயனற்றுப் போனது.

7. பகைவனுக்கு அருளல் :

இராம–இராவணப் போருக்கு முன்னர் இராவணனுக்குத் தூது அனுப்ப இராமன் முற்படுகின்றான். தன் மனைவியாகிய சீதையை அபகரித்தவன், தன் தந்தைக்கு நிகரான சடாயுவைச் சிறிதும் இரக்கமில்லாமல் கொன்ற அரக்கன், தாம் விரும்பிய முனிவர்களையும் தேவர்களையும் துன்புறுத்தியவன் எனப் பல குற்றச்சாட்டு இராவணன் மீது. இராவணனைக் கொல்ல இந்தக் குற்றச் சாட்டுக்களே போதும். எனினும் பகைவனுக்கு அருளும் இராமன் அங்கதனைத் தூது அனுப்புகின்றான்.

"தூதுவன் ஒருவன் தன்னை இவ்வழி விரைவில் தூண்டி
மாதினை விடுதியோ? என்று உணர்த்தவே, மறுக்கும் ஆகின்
காதுதல் கடனென்று உள்ளம் கருதியது, அறனும் அஃதே
நீதியும் அஃதே என்றான் கருணையின் நிலையம் அன்னான்"

(அங்கதன் தூதுப்படலம், பா.2)

தரையில் வைக்கிலேன் தலையை :

பகை கொள்ளாப் பண்பும், போரொடுங்கிய உலகு காணும் அவாவும் கொண்ட இராமன், இராவணனுடன் புரியும் முதல் போரிலும் கூட, இந்த அவாவை வெளிப்படுத்துகிறான்

முதற்போரில் இராமனுக்கு முன்னர் இராவணன் படையிழந்து நின்றான். வெறுங்கையுடன் நின்றவன் நிலநோக்கிய நெடுந்தகை அவனை எச்சரித்து *'இன்று போய் போர்க்கு நாளை வா'* எனப் பணித்தான். படையிழந்து நிற்கும் இராவணனை எச்சரிக்கும் வகையில் உரைக்கும் பொருளும் அவன் பகை கொள்ளாப் பண்பைக் காட்டுகிறது.

"இராவணா! தருமத்தின் நிலையில் நின்று அந்தத் தருமத்தின் பாதுகாப்பின் பொருட்டுப் போர் செய்தால் மட்டும் வெல்ல முடியும். வெறும் வீரத்தைக் காட்டிப் போரில் வெல்லல் தேவர்கட்கும் இயலாது."

"அறத்தினால் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி"

இங்ஙனம் கூறிய இராமன் இந்த நிலையிலும் இராவணன் சில நற்செயல்களைப் புரிந்து பணிந்தால் அவன் தலையை தரையில் வைக்காமல் விடுவேன் எனக் கூறுகின்றான். 'சிறை வைத்திருக்கும் சீதையை விட்டு, தேவர்களை நன்முறையில் வைத்து, வீடணனை அரக்கர் அரசனாக்கி அவனுக்கு நீ பணிவாயாகில் உன் தலையை தரையில் வைக்கிலேன்' என இராமன் உரைத்தான்

"சிறையில் வைத்தவன் தன்னை விட்டு, உலகினில் தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராக்கதர் முதல்பேர்
இறையில் வைத்து அவற்கு ஏவல் செய்து இருத்தியேல்
தரையில் வைக்கிலென், நின் தலை வாளியின் தடிந்து"

மேற்குறித்த கூற்று, இராமன் வெறும் ஆண்மையைக் காட்டும் போரை விரும்பாமையையும், அறத்தின் பொருட்டால் நிகழும் போரையே ஆதரிப்பதையும் காட்டுவதுடன் பகை கொள்ளாப் பண்பையும் காட்டுவது. மாறுபாடு தீர்ந்துவிடில் போரொடுங்கும் உண்மையைக் காட்டுவது. இது குறித்துத் திருவள்ளுவரின் *'இகல்'* என்னும் அதிகாரம் தரும் விளக்கம் இங்கு சிந்திக்கற்பாலது.

முடிவுரை :

நம் நாட்டில் அரசர்கள் நடத்திய போர்முறைகளில் நெறிமுறைகள், அறங்கள் பின்பற்றப் பெற்றன இராமகாதையில் பல போர்கள் நிகழ்கின்றன. இதில் நிகழும் அனைத்துப் போர்களும் அறநெறிப் போர்களே போருக்கு முன்பு தூது அனுப்புவது தமிழ்ப் பண்பாட்டு மரபு என வழங்கப்பட்டது. பண்டைக்காலப் போர்முறைகள் மிகுதியாக இதனுள் விளக்கப்பட்டுள்ளன தாக்கும் முறை, படைகளின் அணிவகுப்பு, போருக்குரிய அறங்கள் முதலியவை அவற்றுள் அடங்கும். இராம–இராவண யுத்தத்தை விளக்கும் போர் முறைகள் கம்பன் வாயிலாக விளக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

கம்பரில் உவமை வளம்

பேரறிஞர் **ம.ரா.போ.குருசாமி**

(1997ம் ஆண்டு ஜனவரி மாத இதழில் வெளி வந்துள்ளது)

இராம-இலக்குவர்கள் சீதாப் பிராட்டியாரோடு கோதாவரிக் கரையை அடைந்த போது, அவர்கள் அந்தப் பேராற்றைக் கண்டதைச் சூர்ப்பணகைப் படலத்தின் முதற்பாடலில் கம்பர் சொல்லுகிறார்.

"புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து
புலத்திற் றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறி அளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்" —கம்ப— 2732

இந்தப் பாடலிலே சான்றோர் கவிபோலக் கோதாவரிப் பேராறு கிடந்ததாகப் பாடுகிறார். கவிதை, ஆற்றுக்கு உவமையாகிறது.

உவமையணியிலே முதன்மையான கூறு, பொதுத் தன்மையாகும். அதாவது, உவமைக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் பொதுவான கூறு இருக்க வேண்டும் நாம் மேலே பார்த்த பாடலில் சான்றோர் கவிக்கும் கோதாவரிக்கும் பல பொதுத் தன்மைகள் இருப்பதைக் கம்பர் எடுத்துரைக்கிறார். அப்படி எடுத்துக்காட்டுகின்ற பொதுத் தன்மைகளில் முதலிடம் பெறுவது அணி – அதாவது அழகு ஆகும். கவிதை (இலக்கிய உலகுக்கு) அழகு; அதுபோலப் புவிக்கு (உலகத்துக்கு) அழகு கோதாவரி.

ஆக, கம்பரின் கருத்துப்படி –அவர் சொன்ன உவமையின்படி– கவிதைக்கு அணி இன்றியமையாதது. *'சான்றோர் அணி பெறச் செய்வன செய்யுள்'* என்று மற்றப் பெரியோர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

அணிகளுக்கெல்லாம் முதன்மையானது ஆதிமுதலானது உவமைதான். உவமை என்னும் நடிகையே பற்பல வேடங்கள் புனைந்து நடிக்கிறாள் என்று அப்பைய தீட்சிதர் என்ற வடமொழிப் புலவர் சித்திர மீமாம்சை என்னும் நூலிலே தெளிவுற விளக்கியுள்ளார். உவமையின் பல்வேறு கோலங்களே எல்லா அணிகளும் என்பது கவிதையியலார் ஏற்றுக் கொண்டுள்ள கருத்தாகும். நம் காலத்து மாபெரும் கவிஞராகிய சுப்பிரமணிய பாரதியாரும் இக்கருத்துடையவர்.

"எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறொன்றுமில்லை. *'உபமாலங்காரமே அலங்கார சாஸ்திரத்தில் பிராணன்'* என்று பழைய இலக்கணக்காரர் சொல்கிறார்கள் என்பது பாரதியார் வாக்கு. எனவே கவிச்சக்கரவர்த்தி கம்பரின் காவியத்தில் அணிகளின் பேரரசியாகிய உவமை, கட்டாயமாக வளமான இடம் பெறுவதில் வியப்பில்லை இயல்பே.

வளம் என்பது இரண்டு வகைப்படும். எண்ணிக்கையின் பெருக்கத்தை வளம் என்கிறோம். தகுதி, தன்மை, புகழ் போன்றவற்றின் பெருக்கத்தையும் வளம் என்று தான் சொல்கிறோம். ஆக, எண்ணிக்கைப் பெருக்கத்தாலும் ஏற்றத்தின் பெருக்கத்தாலும் வளம் அடையாளம் காணப்படும்.

காண்டந்தோறும் நூற்றுக்கணக்கான உவமைகள் இடம் பெற்றுக் கம்பரின் காவியத்திற்கு அழகு ஊட்டுகின்றன. உவமையின் எண்ணிக்கையை நிரல்படுத்தி எடுத்துக்காட்டுவது கால எல்லையில் அடக்கிவிட முடியாது. பொருள் வள ஏற்றத்தால் கம்ப ராமாயணத்துக்கு உவமைகள் வளம் ஊட்டுவதை எடுத்து விளக்குவதும் கால எல்லையில் அடங்காது.

ஆங்காங்கே சில உவமைகளை எடுத்துக்காட்டி, அவற்றால் காப்பியம், கவிதை வளம் பெறுவதை எடுத்துக்காட்டும் சிறு முயற்சியே இப்போது மேற்கொள்ளப்படுகிறது.

"தோள் கண்டார் தோளே கண்டார்" என்ற புகழ் பெற்ற பாடலில், *'கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார்'* என்ற செய்தி வருகிறது. இதில் *'தாமரை போன்ற கால்கள்'* என்ற கருத்தில் *'கமலம் அன்ன தாள்'* என ஓர் உவமை அமைகின்றது. இது மிகவும் சாதாரணமான, எளிய உவமை. இதுபோலவே கைகளுக்கு, கண்களுக்கு, முகங்களுக்குத் தாமரையை உவமை சொல்லும் இடங்கள் மிகப் பலவாகும் ஆனால், தாமரை போன்ற கைகள், தாமரை போன்ற கண்கள், தாமரை போன்ற முகம் என வரும் உவமைகளை எடுத்தாளுவதற்குப் பெருந்திறமை வேண்டியதில்லை. தாமரை போன்ற முகம் என்பதைச் சற்று மாற்றி முகத் தாமரை என்று உருவகமாக்கும் போது எளிய உவமை சற்றே மிகுந்த வளம் பெறுகிறது. *'சாளரம் பூத்தன தாமரை மலர்கள்'* என ஒரு கவித்தொடர் உண்டு. சாளரங்கள் வழியாகப் பெண்கள் பார்த்தார்கள். இந்தச் செய்தியைத் தாமரை போன்ற முகம் கொண்ட பெண்கள் சாளரத்தில் முகம் பதித்துப் பார்த்ததைச் *'சாளரம் பூத்தன தாமரை மலர்கள்'* என்று கவிஞர் பாடுகிறார். வழக்கமான உவமை தான். ஆனால் அதே உவமையைக் கையாளும் முறையில், எளிதான ஓர் உவமை அற்புதமான வளம் பெற்று விடுகிறது.

இன்னொரு காட்சி பார்க்கலாம் மகளிர் முகத்துக்குப் பூரண சந்திரனை உவமையாகப் புலவர்கள் பாடுவது மரபு. சந்திரன் போன்ற முகம், சந்திரவதனம் என்று சொல்லும்போது எளிய உவமையாகின்றது. முழுமதிக்குக் களங்கம் உண்டு. களங்கம் இல்லாமல், முழுப் பரப்பும் ஒளி மயமாகவுள்ள சந்திரன் ஒன்று இருந்தால், அந்த *'மறு இல் மதிபோன்றது பெண்ணின் முகம்'* என்றும் புலவர்கள் உவமை சொல்வார்கள். அப்படி ஒரு சந்திரன் இல்லையாகையால் இவ்வாறு வருவதை இல்பொருள் உவமையணி என்பார்கள். உவமையணியின் வளமான ஒரு வடிவம் தான் இல்பொருளுவமை. இதே இல்பொருளுவமையைக் கம்பர் எப்படி எடுத்துரைக்கிறார் என்று பார்க்கலாம்.

"வாளரம் பொருத வேலும்
மன்மதன் சிலையும் வண்டின்
கோளொடு கிடந்த நீலச்
சுருளும், செங்கிடையும் கொண்டு
நீளிரும் களங்கம் நீக்கி
நிரைமணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும்
சந்திர உதயம் கண்டார்" கம்ப.493

விசுவாமித்திர முனிவரோடு மிதிலை நகர வீதிகளிலே இராமனும் இலக்குவனும் நடந்து போகும்போது அவர்கள் கண்ட காட்சி இது. நகர வீதியிலே நடந்து போகிறவர்கள் சந்திரோதயத்தைக் கண்டார்களாம்! அதுவும் களங்கத்தை முழுமையாகத் துடைத்துவிட்டு மிதிலை நகரத்துச் சன்னல்களிலெல்லாம் சந்திரோதயம் ஆகியிருப்பதைக் கண்டார்களாம். அவர்கள் கண்ட சந்திரன் அழுக்கு நீங்கியதோடு மட்டுமில்லை அந்தச் சந்திரனிலே வேல் இருக்கிறது. வண்டுகள் உள்ள நீலச் சுருள் இருக்கிறது. சிவந்த நெட்டி இருக்கிறது. இப்படிப்பட்ட சந்திரன் ஒன்றல்ல, சாளரம் தோறும் பல சந்திரன்கள்... வேல் போன்ற கண், வில் போன்ற புருவம், நீலச் சுருள் போன்ற கூந்தல், சிவந்த நெட்டி போன்ற உதடுகள் இவ்வளவும் கொண்டதோடு மறுவும் நீங்கிய சந்திரன் போன்ற முகங்கள் சாளரங்களில் தெரிகின்றனவாம். அதாவது, மிதிலை மகளிர் சாளரங்கள் வழியாக இராம, இலக்குவர்களைப் பார்க்கிறார்கள் என்பதைக் கம்பர் இப்படிப் பாடுகிறார். சந்திரன் போன்ற முகம் என்ற ஓர் எளிய உவமை கம்பர் கவி வண்ணத்தால் கற்பனை வளம் கொழிக்கின்ற செவி நுகர் கனியாக வளம் பெருகிப் பொலிகிறது.

ஒரே கருத்துக்கு இரண்டு உவமை கூறும் ஓர் இடத்தைக் காண்போம்.

விசுவாமித்திரரின் வேள்வி காப்பதற்காக அவருடன் இராமனும் இலக்குவனும் போகிறார்கள். இடைவழியில் ஒரு பாலைவனம்; ஈரப் பசை என்பதே சற்றும் இல்லாமல் வறண்டு போய் வெப்பமே ஆதிக்கம் செலுத்துகின்ற கொடிய பாலைவனம்... நீர் வளம் பொருந்தியதே நிலம்; வற்றா நீர் வளம் இல்லாவிட்டாலும் ஈரமாவது இருக்கிறதா? இல்லை. ஈரம் தான் இல்லை; ஈரப் பசையாவது இருக்கிறதா? இல்லை. நீர் இல்லை, ஈரம் இல்லை, பசையும் இல்லை. இப்படிப் பசையற்றுப்போன பாலை நிலத்திற்கு என்ன உவமை சொல்லலாம் என்று நீங்கள் தனியாக இருந்து கற்பனை செய்து பாருங்கள். அப்படி முயன்று நீங்கள் வெற்றி பெறலாம். பெறாமலும் போகலாம். முயன்று பார்த்து முடிந்தபின் கம்பர் தரும் உவமையைப் படித்துப் பாருங்கள். முத்தியை நாடுகின்ற முனிவர் மனம்போலப் பாலைநிலம் பசையற்றுக் கிடக்கிறது என்கிறார். ஆனால், முத்தியையே நாடுகின்ற மனத்தை அவ்வளவு எளிதிலே பெற்று விட முடியுமா என்ன! நல்வினை, தீவினை இரண்டிலுமிருந்து விடுதலை பெற வேண்டும்; காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று மதில்களைக் கடப்பதில் வெற்றி பெற வேண்டும். இந்த இரண்டு வெற்றிகளையும் பெற்றபின் தான் முத்திப்பேறு ஒன்றையே நாடும் பக்குவம் மனத்துக்கு வரும். அந்த மனத்துக்கு விருப்பு வெறுப்பு இரா............பசையற்றுப் போகும். இப்படி விரிந்த தத்துவ வளம் செறிந்த உவமை ஒன்று சொன்னாலே போதும்.

ஆனால், இராம இலக்குவர் கடந்து சென்ற பாலையின் கொடுமைக்கு இந்தத் தத்துவ உவமை மட்டும் சொன்னால் போதாது என்று கம்பர் கருதியிருக்கிறார்.

'இவனுக்கு இடம் கொடுத்தால் எவ்வளவு பொன் கிடைக்கும் என்பதை மட்டும் கணிக்கின்ற கணிகையின் மனம் போலப் பாலைவனம் பசையற்றுக் கிடக்கிறது என்று இரண்டாவதாக இன்னும் ஓர் உவமை கூறுகிறார். ஏதோ இன்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துப் போகிறவனிடம் இருக்கும் பொன்னை மட்டுமே பார்க்கிற பெண்ணுக்கு அன்பு, காதல் என்றெல்லாம் ஒன்றும் இருக்க முடியாது. பொருட் பெண்டிர் தரும் முயக்கத்தைப் பொய்ம்மை முயக்கம் என்பார் வள்ளுவர். அப்பெண்டிர்பால் பெறும் முயக்கம் உணர்ச்சி ஏதும் இல்லாத

பிணத்தைத் தழுவியது போலத்தான் என்று மேலும் அவர் விளக்குகிறார். அத்தகைய பெண்களின் மனத்திலே பசை எப்படி இருக்க முடியும்? விலை மகளிர் மனம் போலப் பசையற்றிருந்தது பாலை. இது இரண்டாவது உவமை.

ஒரு பொருளுக்கு இரண்டு உவமைகள் சொல்லிக் கம்பர் உவமையணிக்கு ஒரு புதிய பரிணாமத்தைக் கொடுத்து வளம் ஊட்டுகிறார்.

இந்தப் பாடலின் உவமை வளம் இந்த அளவோடு நின்று விடவில்லை. முத்தி நாட்டம் ஒன்றையே கொண்ட தகுதி மிக்க முனிவர்கள் மனம் ஓர் உவமை; பொருள் நாட்டம் ஒன்றை மட்டுமே கொண்ட தகுதியால் கீழ்ப்பட்ட விலை மகளிரின் மனம் இரண்டாவது உவமை; இரண்டு மனங்களும் வடதுருவம் தென்துருவம் போல. இலக்கால் முற்றிலும் முரண்பட்ட மனங்கள். ஒன்று, ஆன்ம லாபம் நாடுவது; இன்னொன்று ஆன்ம லாபம் பற்றிக் கனவிலும் கருதாத லௌகிக லாபம், அதுவும் மகா மட்டமான முறையில் தேடுகின்ற லாபம் நாடுகின்ற பாதக மனம். இப்படி இணைத்துக் காணமுடியாத இரு துருவ மனங்களிடையேயுள்ள ஒற்றுமையைக் கண்டு புரட்சிகரமான முறையில் உவமைக்கு வளம் ஊட்டியிருக்கிறார் கம்பர்.

கவிச்சக்கரவர்த்தியின் பாடல் வருமாறு:

"தாவரும் இருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகை அரண்கடந்து முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாலையர் மனமும்போல் பசையும் அற்றதே" –கம்ப. 353

ஒரே பொருளுக்கு இரண்டு உவமைகள் கூறி உவமைக்கு வளம் சேர்த்தது போலவே ஒரே சூழ்நிலைக்குப் பல உவமைகளைப் பல பாடல்களில் கூறி வளம் சேர்ப்பதை இனிக் காண்போம்.

இராவண வதை முடிந்தது இராம–இலக்குவர்கள் பிராட்டியோடு அயோத்திக்குத் திரும்பிவிட்டார்கள். இராமன், வெற்றி இராமனாய்த் திரும்பிவிட்டான். அன்னையர்க்குப் பிள்ளை அயோத்தியர்க்குச் சக்கரவர்த்தி, அனைவர்க்கும் கண்ணின் பாவை ....இவ்வளவு தானா? உலகியல் மாயையைக் கடந்து விட்டவர்களுக்கும் உயிரமுதம்... இப்படியாகச் சூழ்நிலை ஒன்று, ஆனால், இராமன் பற்பலர்க்குப் பற்பல வகையில் நிறைவு தருகிறவனாக இருக்கிறான். ஒற்றை நிகழ்ச்சியின் ஒரே சூழல். பல்வேறுபட்டவர்களின் பல்வேறு அனுபவங்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த நிலையைச் சமாளிப்பதற்குக் கவிச்சக்கரவர்த்தியின் கவிதைத் திறன் கைகொடுத்துச் சாதனை படைக்கிறது.

தாய்மார்களுக்குத் தாய்ப் பசுவைச் சென்றடைந்த கன்று போன்றவன் ஆயினான் இராமன். உலகியல் மாயையிலிருந்து விடுபட்ட ஞானியர்க்கு மனம் ஒன்றிப் போகின்ற மனோலயம் போன்றவனான ஒளியற்ற கண்ணராயிருந்த பரத, சத்துருக்கனனாகிய இளையோர்க்குக் கண்பாவையானான். உயிரற்றுக் கிடந்த உடலுக்குள் உயிர் புகுந்தது போன்ற அனுபவத்தை விளைவித்தவன் ஆனான்.

கோசலை முதலியோர்க்குத் தாயை அடைந்த கன்று போன்றவனானான் என்று முதலில் சொல்லிய கம்பர், அவனுடைய வனவாசத்தால் மெலிவுற்ற பிற உயிர்களுக்கு–உயிர்க் கன்றுகளுக்குத் தாய் வந்துவிட்டது போன்றவன்

ஆனான் இராமன் என்று அவனைத் தாய்ப்பசு ஆக்குகிறார். கன்றும் அவனே; தாயும் அவனே! அன்பு கொண்டவர்க்கு எல்லாம் கிடைத்தற்கு அரிய அமுதம் போன்றவன் ஆனான். அவன் இன்மையால் இருண்டு போயிருந்தது உலகம்; இப்போது இருளுலகத்துக்கு ஒளி வந்தது போன்றவன் ஆனான். வாழ்வைச் சாவாக்கிக் கொண்டிருந்த பெண்களுக்குக் களிப்பேற்றும் அமுத பானம் போன்றவன் ஆனான்.

சுருங்கச் சொன்னால், அவனைத் தவிர எவர்க்கும், எதற்கும் உயிர் என வேறு இல்லை; உயர்திணை, அஃறிணை எல்லாருக்கும் எல்லாவற்றுக்கும் அவனே உயிர், உயிர் திரும்ப வந்தது போல் இருந்த காடு, வயல், நகரம், நாடு, மகளிர் ஆடவர் எல்லாமும் எல்லாரும் ஓவியங்களாக இருந்தன, இருந்தனர். இப்போது அந்த ஓவியங்களுக்கு உயிர் வந்துவிட்டது போல இராமன் வந்துவிட்டான். உயிர் தழைத்தது, உணர்வு பொங்கியது.

இராமன் வருகை ஒரே நிகழ்ச்சி. இந்த ஒரு நிகழ்ச்சியின் விளைவுகளைப் பல உவமைகளை உவமைக்கொத்தாகக் கொடுத்து உவமை வளம் காட்டுகிறார் கம்பர். பாடலும் ஒன்று அன்று, மூன்று:

"தாயருக்கு அன்று சார்ந்த கன்றெனும் தகையன் ஆனான்
மாயையில் பிரிந்தோர்க் கெல்லாம் மனோலயம் வந்ததுஒத்தான்
ஆய் இளையார்க்கும் கண்ணுள் ஆடு இரும்பாவை ஆனான்
நோய்உறு உலர்ந்த யாக்கை உயிர்புகுந்தானும் ஆனான்

எளிவரும் உயிர்கட் கெல்லாம் ஈன்றதாய் எதிர்ந்த தொத்தான்
அளிவரும் மனத்தோர்க் கெல்லாம் அரும்பத அமுதம் ஆனான்
ஒளிவரப் பிறந்தது ஒத்தான் உலகினுக்கு; ஒண்கணார்க்குத்
தெளிவரும் களிப்பு நல்கும் தேம்பிழி தேறல் ஒத்தான்

ஆவி அங்கு அவனலால் மற்று இன்மையால் அனையன் நீங்கக்
காவிஅம் கழனி நாடும் நகரமும் கலந்து வாழும்
மா இயல் ஒண்கணாரும் மைந்தரும் வள்ளல் எய்த
ஓவியம் உயிர் பெற்றென்ன ஓங்கினார் உணர்வு பெற்றார்"

–கம்ப 10270 – 72

எளிய உவமையை எளிமையாக அமைத்து நிறைவு அடைபவர் அல்லர் கம்பர். எளிய உவமையைச் சதுரப்பாட்டுடன் வளம் ஊட்டிச் சிறப்பிப்பதில் வல்லவர் கவிச்சக்கரவர்த்தி கம்பர். ஒற்றைத் தனி உவமைக்குப் புதுமையால் வளம் ஊட்டுவதோடு, ஒன்றுக்கே இரண்டு உவமை புனைந்து வளமூட்டுவார் அவர். அவ்வாறு இரண்டு உவமைகள் கொடுக்கும் போது முரண்பட்ட இரண்டு பொருள்களை ஒன்றுக்கே உவமைகளாக்கி வளமூட்டியவர் கம்பர். பல உவமைகளை உவமைக் கொத்தாக்கிக் கவிதையரங்கில் புதுமையும் புரட்சியும் செய்து உவமைக்குப் பெருவளம் சேர்த்தவர் கம்பர்; ஆகவேதான்,

'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே' என்று அறிஞர்கள் அவரைச் சிறப்பித்தனர்.

(நன்றி: கோவை வானொலி 2.1.97)

02.01.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் மற்றும் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை இரண்டாம் ஆண்டு மாணவி கிருஷ்ணவேணி தமது உரையில், "தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் தமிழக வரலாற்றின் பெரும்பகுதியை வெளிச்சம் போட்டுக் காட்டியவர்; இலக்கியங்களையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு வரலாறு எழுதியவர்; இலக்கியத்தில் மட்டுமல்லாது இலக்கணத்திலும் மிகச்சிறந்த புலமை பெற்றவர்; *'செந்தமிழ்'* மற்றும் *'தமிழ்ப்பொழில்'* ஆகிய இதழ்களில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர்" என்று குறிப்பிட்டார். இளங்கலை இரண்டாமாண்டு மாணவி கார்த்திகா தமது உரையில் "சி.வை.தாமோதரம்பிள்ளை பைந்தமிழ்ப் பதிப்பாளர்; பதிப்புத்துறையின் முன்னோடி; எப்பணிக்கும் முதற்பணி தமிழ்ப் பணியே என்பது அவருடைய உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்த கருத்தாகும். ஓலைச் சுவடிகளில் செல்லரித்துக் கொண்டிருந்த இனிய தமிழை அச்சுவாகனம் ஏற்றி அன்னைத் தமிழ் நெஞ்சங்களில் உலவ விட்டவர்களுள் ஒருவர் சி.வை.தாமோதரம்பிள்ளை" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகத் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் மற்றும் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆகியோரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

06.01.2017 அன்று பிரமிள் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மூன்றாமாண்டு இளம் இலக்கியம் மாணவி பொன்.அமிர்தவள்ளி பிரமிள் அவர்களின் வாழ்வு மற்றும் படைப்புகள் குறித்துப் பேசினார். அவர் தமது உரையில், "தருமு சிவராம் என்றழைக்கப்பட்ட பிரமிள் இலங்கையில் பிறந்திருந்தாலும் தமிழகத்திலேயே வாழ்ந்து பல்வேறு படைப்புக்களை வெளியிட்டு ஒரு தமிழக எழுத்தாளராகவே மதிக்கப்படுபவர். நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் பிறகு தோன்றிய ஒரு மகத்தான ஆளுமை பிரமிள் ஆவார். படிமக்கவிஞர் என்றும் ஆன்மீகக் கவிஞர் என்றும் சிறப்பிக்கப்பட்ட இவரது கவித்துவம் இரண்டாயிரமாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தனித்துயர்ந்து நிற்பதாகும்" என்று குறிப்பிட்டார். பிரமிள் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

09.01.2017 அன்று முற்பகல் 11 மணியளவில் வெ.சாமிநாதசர்மா அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. இளங்கலை முதலாமாண்டு மாணவி அனிதா தமது உரையில் "83 ஆண்டு கால வாழ்க்கையில், சாமிநாதசர்மாவின் இலக்கிய வாழ்க்கை 64 ஆண்டுகளாகும். அவருடைய 78 நூல்கள் அவரது புகழைப் பரப்பிக் கொண்டு வருகின்றன. அவர் தமிழில் அரசியல் இலக்கியத்தின் முன்னோடி ஆவார். வெ.சாமிநாதசர்மா அவர்கள் வாழ்க்கையைப் போலவே எழுத்திலும் ஒழுக்கத்தையும், பண்பையும் கடைப்பிடித்தவர். தேசியவாதியாகவும், காந்தியவாதியாகவும் இறுதி வரை வாழ்ந்தவர்" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர் உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக வெ.சாமிநாதசர்மா அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

10.01.2017 அன்று மது.ச.விமலானந்தம் அறக்கட்டளையின் சார்பாக அரசஞ்சண்முகனார் நினைவுச் சொற்பொழிவு நடைபெற்றது. சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.க.சி.அகமுடைய நம்பி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். *"அரசஞ்சண்முகனாரின் தமிழ்ப்பணி"* என்ற தலைப்பில் மதுரை யாதவர் இருபாலர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வீ.மோகன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் "*அரசஞ்சண்முகனார் அவர்கள்* சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் ஆழ்ந்து கற்று தமிழில் பெரும்புலமை பெற்று விளங்கியவர்; பன்னிரெண்டு ஆண்டுகள் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய அரசஞ்சண்முகனார் தலைமையாசிரியர் தமிழை இழித்துப் பேசினார் என்பதற்காகத் தனது தமிழாசிரியர் பதவியை உதறியது மூலம் இவரது தமிழ்ப்பற்றை நாம் அறிந்து கொள்ளலாம். திருக்குறளுக்குப் புதுவிளக்கம் தந்தவர்; 1909இல் மேலைச் சிவபுரி சன்மார்க்கசபை நிறுவப்பட்டபோது அச்சபையைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர்" என்று குறிப்பிட்டார். திருவேடகம் விவேகானந்தா கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வ.க.இராமகிருஷ்ணன் அவர்கள் நினைவுரை ஆற்றினார். முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர். முன்னதாக சோழவந்தான் அரசஞ்சண்முகனார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

12.01.2017 அன்று சங்க வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரிச் செயலாளர் இராணி.ந.லட்சுமி குமரன்சேதுபதி அவர்களும் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்களும்

விளக்கேற்றிப் பொங்கல் விழாவைத் துவக்கி வைத்தனர். மாணவர்கள் பொங்கல் வைத்துக் கொண்டாடிச் சிறப்பு வழிபாடுகள் செய்து மகிழ்ந்தனர். இவ்விழாவில் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

21.01.2017 அன்று பிப்ரவரி மாதம் தனித்தமிழ் இயக்க நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது எனச் சங்க ஆட்சிக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சிக்குழுக் கூட்டத்திற்குச் சங்கத் தலைவர் முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் "பிப்ரவரி மாதம் தனித்தமிழ் இயக்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் திரு.வி.க. விருது பெற்ற திரு மறைமலை இலக்குவனார் அவர்களுக்கும், கி.ஆ.பெ.விருது பெற்ற திருமதி. மீனாட்சி முருகரத்னம் அவர்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. சங்கத்தில் தேவநேயப் பாவாணர், கா.காளிமுத்து, டி.பி எம்.பெரியசாமி, ஆண்டியப்பத்தேவர் உள்ளிட்டோர் பெயர்களில் புதிய அறக்கட்டளை நிறுவி தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்தப்படும்" என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில், செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரிச் செயலர் ராணி ந.லட்சுமி குமரன் சேதுபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

21.01.2017 அன்று பிற்பகல் சங்க வளாகத்தில் நடைபெற்ற செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் மாணவர் சங்க விழாவிற்குக் கல்லூரிச் செயலர் ராணி ந.லட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரைப்பட இயக்குநர் கே.பாக்யராஜ் அவர்களுக்கு *'முத்தமிழ் வேந்தர்'* விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கல்லூரிக்குழுத் தலைவர் வழக்குரைஞர் ச தசரதராமன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.க சி.அகமுடைநம்பி, சத்தியநாராயணன், துரை கருணாநிதி, புலவர் சங்கரலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக ஆசிரியர் தனுஷ்கோடி வரவேற்றார். முன்னாள் மாணவர் சங்கச் செயலர் முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்கள் நன்றி கூறினார்

26.01.2017 அன்று காலை சங்க வளாகத்தில் குடியரசு தினக் கொடியேற்று விழா நடைபெற்றது. செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியின் தலைவர் வழக்குரைஞர் திரு.ச தசரதராமன் அவர்கள் கொடியேற்றினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, கல்லூரி முதல்வர், துணை முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

மார்ச் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கா.நமச்சியவாய முதலியார்
(மார்ச் 13 - 1934)



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
(பிறந்த நாள்)
(மார்ச் 21 - 1867)



ந.மு.வேங்கடசாமி நாட்டார்
(மார்ச் 28 - 1944)

தமிழ் ஒளி
(மார்ச் 29 - 1965)

பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **வெ.சுயம்பு**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.வெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்,
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
THE SECRETARY,
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001. Tamilnadu.

பெறுநர் / To,

Book Post

வெளியிடுபவர் : **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. **0452 - 2343707**
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : **94874 45403**
அச்சிட்டோர் : **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : **97894 95738**